வாராந்த சஞ்சிகை

ஓகஸ்ட் 19 - 25, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-





# கடைசி வாய்ப்பு




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆற்றின் நடுவே நெடுஞ்சாலை

சீனாவின் ஹூபே மாகணத்தில் அமைந்துள்ள இந்த இயற்கை எழில் கொஞ்சும் புதிய நெடுஞ்சாலையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தற்போது திறந்து விட்டுள்ளனர்.


கிழக்கு சீனாவின் ஷாங்காய் நகரையும் தென் மேற்கில் அமைந்துள்ள செங்குடு நகரையும் இணைக்கும் வகையில் இந்த நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

இந்த நெடுஞ்சாலை பாலத்திற்கு, அருகில் உள்ள மலையின் அற்புத அழகு, தூரத்தில் தெரியும் கிராமங்கள், கீழே பாய்ந்து ஓடும் நதியின் குளிர்மை எனப் பயண நேரத்தைக் குதூகலப்படுத்தும் வகையில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.

2013ஆம் ஆண்டு இந்த நெடுஞ் சாலைக்காக 3 திட்டங்கள் முன்வைக் கப்பட்டது. அதில் 2 திட்டங்கள் மலையைக் குடைந்து பாலம் அமைப்பதாய் இருக்க, மலைகளின் மீதும், அதில் உள்ள உயிரினங்களின் மீதும் அக்கறை கொண்ட அமைப்பாளர்கள், தற்போதைய இந்த திட்டத்தை தெரிவு செய்தனர்.

புதிதாகத் திறக்கப்பட்ட இந்த நெடுஞ்சாலை சீன ஊடகங்கள் மட்டுமின்றி சர்வதேச ஊடகங்களின் கவனத்தையும் சேர்த்து ஈர்த்துள்ளது.

இதற்கு முன்பு ஒரு மணி நேரமாக இருந்த பயண நேரத்தை இந்த புதிய நெடுஞ்சாலை 20 நிமிடமாகக் குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# உலக நாடுகளை அதிர வைத்த முதியவர்

பிரித்தானியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் தன் வீட்டிலிருந்து விண்வெளிக்கு பேசிய சம்பவம் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இரண்டு ஊர்களுக்கு இடையில் இருப்பவர்கள் உடனுக்குடன் பேசிக்கொள்ளவே சிரமப்பட்ட காலங்கள் மறைந்து தற்போது இரண்டு கிரகங்களுக்கு இடையில் பேசும் அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது.

சாதாரணமாக விண்வெளி வீரர்கள் பூமியில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடன் மட்டுமே தொடர்பு கொண்டு பேச முடியும். 'சிக்னல்' பலமாக இருந்தால் சில ரேடியோ இயக்குநர்களுடனும் பேசலாம்.

ஆனால் தற்போது பிரிட்டனைச் சேர்ந்த 'அமெச்சூர் ரேடியோ' எனப்படும் 'ஹேம் ரேடியோ' இயக்குநராகப் பணியாற்றும் 52 வயது அட்ரியென் லேன் என்பவர் முதல் முயற்சியிலேயே தனது வீட்டின் பின்புறத்தில் உள்ள ஒரு சாதாரண அறையில் இருந்தவாறு, சாதாரண ரேடியோ ஒலிபரப்பு அலைவரிசை மூலம் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியுள்ள அமெரிக்க வீரர்களுடன் பேசி சாதனை படைத்துள்ளார்.

அவரது அழைப்பை சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள வீரர் கவனித்து அவருக்கு பதிலளித்தார்.

பூமி எப்படி காட்சியளிக்கிறது என லேன் கேள்வியெழுப்பினார். மேலே இருந்து பார்க்கும்போது இடைப்பட்ட பகுதி அனைத்தும் கும்மிருட்டாகவே உள்ளது. பூமிப்பந்து மட்டும்தான் பலவித வண்ணங்கள் கொண்ட வர்ணஜாலக் கோலமாக ரம்மியமாக தோன்றுகிறது என்று விண்வெளி வீரர் கூறினார்.

இந்த 50 வினாடி உரையாடல் சர்வதேச அளவில் பெரிய விஷயமாக மாறியிருக்கிறது.

விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையம் தற்போது எங்கு சுற்றிக் கொண்டுள்ளது, நமது நகரின் மீது, வெகு துல்லியமாக தமது வீட்டின் மேற்பரப்பை எந்த நேரத்தில் கடக்கும், என பலமுறை நன்கு ஆராய்ந்து முறையாக திட்டமிட்டு அவர் செய்த முதல்முயற்சியிலேயே பெரிய வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல நமது வீட்டுக்கு மேல் வரும்போது செய்தால் நம்மாலும் விண்வெளி வீரர்களுடன் பேச முடியுமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி வாய்ப்பு

- ஆதங்கன்



பலரின் கணிப்பையும் பொய்யாக்கி விட்டு கூட்டமைப்பு இம்முறை 16 ஆசனங்களைத் தனதாக்கி இலங்கையில் மூன்றாவது மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது. தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்னர்வரை இத்தனை ஆசனங்களை கூட்டமைப்பு வெல்லுமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. கடந்த காலங்களில் கூட்டமைப்பின் சில செயற்பாடுகளில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையீனம், இளையோருக்கு வாய்ப்பளிக்கப் படாமை, கூட்டமைப்புக்கு மாற்றீடாக தமிழ்த்தேசிய முன்னணி செல்வாக்குப் பெற்றது போன்ற விம்பம், தேர்தல் மீதும் ஜனநாயக வழிமுறை மீதும் மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஆர்வமின்மை போன்ற காரணிகள் கூட்டமைப்பின் ஆசனங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் பலரும் ஆருடம் கூறியிருந்தார்கள். இதனைவிட யாழ் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து 7 ஆகக் குறைக்கப்பட்டும் இருந்தது. இதுவும் கூட்டமைப்பின் ஆசன எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது.

என்னதான் நிகழ்ந்தாலும் மக்கள் தங்களது நிலைப்பாட்டில் மிகத் தெளிவாகவே இருந்துள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டிவிட்டன. ஏறக்குறைய 60 வீத வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நிகழ்ந்திருந்தது. தமிழர் பகுதிகளிலும் அண்ணளவாக இதே அளவு வீதத்தினரே வாக்களித்திருந்தனர். இவர்களின் வாக்குகளே தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இருந்தது. மக்கள் தங்கள் கடமையை சரிவரச் செய்து கூட்டமைப்பை மீண்டும் முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள். கூட்டமைப்பே எதிர்பாராத வெற்றியை வழங்கியிருக்கிறார்கள். இதனால்தான் இனி கூடப்போகும் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற பெருமை கூட்டமைப்பை வந்து சேர்ந்திருக்கிறது.

ஆனால் கடந்த காலங்களைப்போல இனிவரும் காலங்களிலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏனோ தானோ என்ற அரசியல் நடத்தமுடியாது. ஏனெனில் இம்முறை கூட்டமைப்புக்கு வாக்களித்த ஒவ்வொருவரும் "இதுதான் நாங்கள் வழங்கும் கடைசிச்சந்தர்ப்பம்" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு தான் வீட்டுக்கு நேரே புள்ளடி இட்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைக்கூட தவறவிட்டுவிட்டு " நாங்கள் என்ன செய்தாலும் மக்கள் வீட்டுக்கே வாக்களிப்பார்கள்" என்ற நினைப்பில் பழைய பாணியிலேயே அரசியல் செய்ய கூட்டமைப்பு முற்படுமானால் இனிவரப் போகும் தேர்தல்களில் இம்முறை தமிழ்த்தேசிய முன்னணிக்கு என்ன கதியேற்பட்டதோ அதே கதியே கூட்டமைப்புக்கும் ஏற்படக்கூடும். ஏனென்றால் எப்போதும் கூட்டமைப்பு குட்டிக் கொண்டே இருக்க தொடர்ந்தும் குனிந்து கொண்டே மக்கள் இருக்கப் போவதில்லை. கூட்டமைப்புக்கு முன்னால் நிறைய சவால்களும் அதே அளவுக்கு அனுகூலங்களும் இருக்கின்றன. சவால்களைச் சமாளித்தலும் அனுகூலங்களை சாதகமாக்கிக் கொள்ளலிலும்தான் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கப் போகிறது.

கூட்டமைப்பு பெரிதாக ஒன்றும் செய்யத்தேவையில்லை. ஏனெனில் அது என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனமே சொல்லிநிற்கின்றது.

நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு தமது உரிமைகளைத் தொலைத்துவிட்டு நிற்கும் மக்களுக்கு சமஷ்டிமுறையிலான தீர்வைப் பெற்றுக்கொடுக்க நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை கூட்டமைப்பு பயன்படுத்த வேண்டும். இப்போதுவிட்டால் வேறு எப்போதுமே சமஷ்டியைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியங்கள் கிடைக்கப்போவதில்லை. சர்வதேசம் ஈழத்தமிழர்களுக்கு சமஷ்டியை வழங்க வேண்டும் என்பதில் இன்னமும் அதே உறுதியோடே இருக்கிறது. இதுவரை காலமும் சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டாலே முஷ்டியை முறுக்கி சண்டித்தனத்துக்கு வந்த மஹிந்த தலைமையிலான பேரின அரசு இப்போது முற்றாக அகற்றப்பட்டு விட்டது. மாறாக சமஷ்டி பற்றி ஓரளவுக்கேனும் பேசக்கூடிய ரணில் தலைமையிலான அரசே இன்னும் ஐந்துவருடத்துக்கு ஆட்சியில் இருக்கப் போகிறது. அதைவிட ஜனாதிபதி மைத்திரியும் அவரது நெருங்கிய சகாவான ராஜித சேனாரத்தினவும் சமஷ்டித் தீர்வு பற்றிய சாதகமான கருத்துக்களையே வெளியிட்டு வருகிறார். இந்த நிலையில் கூட்டமைப்பின் காய் நகர்த்தல்களே அரசை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்துவந்து சமஷ்டியை நோக்கி பயணிக்க வைக்க முடியும். ஏற்கனவே தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட்டமைப்பு சமஷ்டித் தீர்வு நோக்கிய தங்களுடைய நகர்வு எப்படி இருக்கப்போகிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. தேர்தல் விஞ்ஞாபனம் என்பது வெறுமனே வாக்குளைப் பெறுவதற்காக அச்சிடப்படுகின்ற காகிதமாக இருக்கக் கூடாது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட ஒவ்வொன்றும் உயிரூட்டம் பெறவேண்டும். அதுவே மக்களின் நம்பிக்கை ஜனநாயகத்தின் மீது மீண்டும் ஏற்பட வழிசெய்யும்.

கடந்த காலங்களில் கூட்டமைப்பின் சில செயற்பாடுகளும் முடிவுகளும் தமிழ் மக்களின் பெரும்பாலானோரின் விருப்புக்கு மாறாகவே இருந்தது. இந்த நிலையைத் தொடர கூட்டமைப்பு இனியும் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் கூட்டமைப்பின் ஒவ்வொரு முடிவும் அது எடுக்கின்ற ஒவ்வொரு நகர்வும் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கவல்லது. கட்சியின் ஓரிரண்டு பேர் தங்களுடைய விருப்பத்தை முன்னிறுத்தி எடுக்கின்ற முடிவுகள் ஒரு இனத்தின் தலையெழுத்தையே மாற்றிப் போட்டுவிடக்கூடும்.

எனவே, உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணுவதற்கான வழிவகைகளை கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும். மாகாணசபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கான வேட்பாளர் தெரிவுகளில் கட்சியில் ஒரு சிலரின் ஆதிக்கம் இருந்ததாக குற்றம் சுமத்தப் பட்டிருந்தது. இத்தகை அவதூறுகளை இல்லாமற்செய்ய வேண்டுமானால் கட்சியின் பெரும்பாலானோரின் கருத்துக்கேற்பவே முடிவுகளை எடுக்க வேண்டும். மாறாக கட்சியின் முக்கிய பொறுப்பிலிருக்கும் ஒரு சிலர் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்துவிட்டு அதனை மற்றைய உறுப்பினர்களும் ஏற்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கும் போக்கு இனியும் தொடராது இருக்க வேண்டும்.

கூட்டமைப்பு மீது கடந்த காலங்களில் மக்கள் முன்வைத்த மிகப்பெரும் குற்றச்சாட்டுக்களில் ஒன்று தமக்காக போராட கூட்டமைப்பு அரசியல் வாதிகள் வருவதில்லை என்பதுதான். எந்த ஒரு இயக்கமோ அல்லது கட்சியோ மக்கள் மயப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். கடலில் இருந்தால்தான் மீன் உயிர்வாழமுடியும். அரசியல்வாதிகள் என்ற மீன்கள் மக்கள் என்னும் கடலில் இருந்து வெளியேறினால் கடலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. மீனுக்குத்தான் பாதிப்பு. மக்கள் மயப்படுத்தப்படாத அல்லது மக்களுக்காகச் சேவையாற்ற முன்வராத அரசியல் கட்சிகள் நீண்டகாலம் நிலைக்க முடியாது. வாக்குச் சேகரிப்பதற்காக மட்டும் கைகளைக் கூப்பிக்கொண்டு வீடுவீடாகச் செல்லும் வேட்பாளர்கள் தேர்தலில் வென்றவுடன் கொழும்பு வாசிகளாகிவிடுகிறார்கள். ஆடிக்கொருமுறையோ அமாவாசைக்கொருமுறையோதான் அவர்களின் தலைக்கறுப்பை மக்கள் தரிசிக்க முடிகிறது.

மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் எப்போதும் தாம் சார்ந்த சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணி வரவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றும் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்லர். அவர்களும் அதே சமூகத்தில் இருந்து உருவானவர்கள். இந்த நினைப்பு கூட்டமைப்பு அரசியல்வாதிகளிடம் எப்போதும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மக்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான இடைவெளி குறைந்து ஒரு அத்தியந்தமான நெருக்கம் ஏற்படும். மக்களின் குறைகள், தேவைகள் என்பவற்றை உடனடியாகவே தீர்க்கும் நிலை இதன் மூலம் தோன்றும் அப்படி மக்களுக்குள் இறங்கிப் பணியாற்ற கூட்டமைப்பில் எத்தனைபேர் தயாராக இருக்கிறார்கள்? விரும்பியோ விரும்பாமலோ மக்களோடு இணைந்து பணியாற்றுவதே அவர்களுக்கு அடுத்தமுறை அரசியலைத் தொடர இருக்கும் ஒரே வழியாகும். இல்லாவிட்டால் மக்கள் பணியாற்றாதவர்கள் மக்களாலேயே தூக்கி எறியப்படும் நிலை உருவாகும்.

மக்களின் விருப்பறிந்து அவர்களின் உரிமைக்காக ஒவ்வொரு கணமும் போராடக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சித்தமாக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் நிகழ்ந்தமக்கள் போராட்டங்களில் ஒரு சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் மாத்திரமே தலைகாட்டியிருந்தார்கள். மற்றவர்கள் அதுபற்றி எந்தவித அக்கறையும் காட்டவில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

தனியே எதிர்ப்பரசியல் செய்வதென்பதும் தற்போதைய அரசியல் சூழ் நிலையில் பொருத்தமற்றதுதான். ஆனால் எதிர்ப்பரசியல் சரிவராது என்பதற்காக சரணாகதி அரசியலில் ஈடுபடுவதும் நியாயமாகாது. மக்களுக்கு நன்மை விளையும் எனில் மாத்திரம் சில விடயங்களில் அரசோடு ஒத்திசைவான நகர்வுகளை கூட்டமைப்பு மேற்கொள்வ தையே் மக்கள் விரும்புகிறார்கள். அதாவது எதிர்க்க வேண்டிய விடயங்களை எதிர்த்தும், ஆதரிக்க வேண்டிய விடயங்களை ஆதரிப்பதும் கூட்டமைப்பின் பணியாக இருக்க வேண்டும். இந்த எதிர்ப்பும் ஆதரிப்பும் கூட மக்கள் நலன்சார்ந்ததாக இருக்க வேண்டுமே தவிர, கூட்டமைப்பு உறுப்பினர்களின் தனிப்பட்ட நலன் சார்ந்ததாக இருக்க முடியாது.

கடந்தகாலத் தவறுகளைச் சரிசெய்து இனத்தின் கொள்கைகளை முன்னெடுத்து சமஷ்டி நோக்கிய பாதையில் தடம்புரளாது கூட்டமைப்பு பயணிக்கு மேயானால் இனிவரும் காலங்களில் அது அசைக்க முடியாத சக்தியாகவே இருக்கும்.

**“ கூட்டமைப்புக்கு வாக்களித்த ஒவ்வொருவரும் “இதுதான் நாங்கள் வழங்கும் கடைசிச்சந்தர்ப்பம்” என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டுதான் வீட்டுக்கு நேரே புள்ளடி இட்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப் பத்தைக்கூட தவறவிட்டுவிட்டு “ நாங்கள் என்ன செய் தாலும் மக்கள் வீட்டுக்கே வாக்களிப்பார்கள்” என்ற நினைப்பில் பழைய பாணியிலேயே அரசியல் செய்ய கூட்டமைப்பு முற்படுமானால் இனிவரப்போகும் தேர்தல்களில் இம்முறை தமிழ்த்தேசிய முன்னணிக்கு என்ன கதியேற்பட்டதோ அதே கதியே கூட்டமைப்புக் கும் ஏற்படக்கூடும். ”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசாத்

அண்மையில் சர்வதேச அளவில் புகழ்பெற்றவரான றகர் விளையாட்டு வீரரின் சடலம் அவர் புதைக்கப்பட்ட குழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, இரசயானப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இது தோண்டி எடுக்கப்பட்ட போது அந்தப் பகுதி மக்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ குடும்பத்தினரால், அவர் கொலை செய்யப்பட்டதாக கூறிப் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியமையால் அந்தப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

றக்ர் விளையாட்டு வீரரான வாஷிப் தாஜுதீன் 2012 இல் ஒரு விபத்தில் இறந்ததாகவே கூறப்பட்டது. அவர் ஓடி வந்த வாகனம் மதில் ஒன்றுடன் மோதியதால் தீப்பிடித்ததாகவும், அதனால் அவர் தீயில் கருகி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவரின் உறவினர்கள் அது ஒரு விபத்து மரணமல்ல எனவும் அதனால் நேர்மையான விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் எனவும் கோரினர். அவர்களின் கோரிக்கை அப்போது நிராகரிக்கப்பட்டது.

எனினும் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு இரகசியப் பொலிஸார் அது கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அந்த விசாரணைகளின் போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன. மஹிந்த ராஜபக் ஷவின் இரண்டாவது மகனும், கடற்படை அதிகாரியுமான யோஷித ராஷபக் ஷவுக்கு ஒரு பெண் விவகாரம் தொடர்பாக தாஜுதீனுக்கும் தகராறு இருந்ததாகவும் அதன் அடிப்படையில் கொலை நடந்திருக்கலாம் எனவும் சந்தேகம் தோன்றியுள்ளது. மேலும் இந்தச் சம்பவத்தில் செஞ்சிலுவைச் சங்க வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. ஆனால் செஞ்சிலுவைச் சங்கம் அது தங்களுக்கு வந்த வாகனம் என்பதை ஒப்புக் கொண்ட அதே வேளையில் ஆனால் தங்களிடம் கையளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து விட்டது. ஆனால் அது முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான ஷிரந்தி ராஜபக் ஷவினால் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது.





எனினும் இரசயானப் பரிசோதனை நிறைவு செய்யப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை கிடைத்த பின்பே மேலதிக தகவல்களை வெளியிட முடியும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்சமயம் யோஷிதவுக்கும், தாஜுதீனுக்குமிடையே ஒரு பெண் தொடர்பாக தகராறு இருந்ததாகவும், அவரின் தாயாரான ஷிரந்தி ராஜபக்ஷவின் பாவனையில் உள்ள வாகனம் சம்பந்தப்பட்டுள்ளது என்பன போன்ற சில தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தநிலையில் தாஜுதீனின் உறவினர்கள் அவர் யோஷித தரப்பால் கொலை செய்யப்பட்டார் எனத் திட்டவட்டமாக நம்புகின்றனர். அதன் விளைவாகவே ஆர்ப்பாட்டங்களும், குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

இங்கு ஒரு முக்கிய விடயம் என்னவெனில் கொழும்பில் கடத்தப்பட்டுக் காணாமல் போனவர்கள் விவகாரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை போன்ற வற்றில் சம்பந்தப்பட்டுள்ளதாக கடற் படையினர் சிலர் கைது செய்யப்பட் டுள்ளனர். இரகசியச் சித்திரவதை முகாம்களைக் கடற்படையினர் நடத்திய தகவல்களும் வெளிவந்துள்ளன.

எனவே இந்த மரணம் தொடர்பாக அவரின் உறவினர் கள் ஒரு கடற்படை அதிகாரியான யோஷித ராஜபக் ஷவைச் சந்தேகிப்பதில் ஆச்சரியம் இருந்து விட முடியாது. அதே வேளையில் இந்த விசாரணைக்ள் ஆரம்பிக்கப்பட்ட நாள்களில் மஹிந்தவின் மூத்த மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தாஜுதீன் தங்கள் குடும்ப நண்பர் எனவும் தாங்கள் அவரின் தாயாரிடம் தேனீர் அருந்திய தாகவும் தெரி வித்தார். மஹிந்த தேநீர் கொடுத்து அரசியல் வாதிகளை தன் பக்கம் இழுப்பது பற்றி அடிக்கடி பெருமை யாகப் பேசுவ துண்டு. மைத்திரி பால சிறிசேன முதல் நாள் தேநீர் அருந்தி அப்பம் சாப்பிட்டு விட்டு அடுத்த நாள் தனது முதுகில் குத்தி விட்டதாகவும் அவர் புலம்பியதுமுண்டு. அவ்வகையிலேயே தாஜுதீனின் தாயாரிடம் தேநீர் அருந்தி விட்ட அடுத்த நாள் கொலை செய்திருக்கக் கூடுமோ எனச் சந்தேகமும் எழக் கூடும். எப்படியோ சக்தி படைத்த கரங்களின் அழுத்தங்கள் இல்லாவிடில் வெகு விரைவிலேயே உண்மைகள் வெளிவருவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.




பிரபல ஊடகவியலாளரும் கேலிச்சித்திரக்காரருமான பிரகீத் எக்கலிக்கொட காணாமல் போய் ப ல வருடங்கள் கழிந்து விட்டன. அவரை விடுவிக்கும் படி கோரி பல ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அவரின் மனைவி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வரை இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்றார். எனினும் எந்த வித பலனும் கிட்டவில்லை.

ஆனால் அண்மையில் பிரகீத் காணாமற் போனமை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷமன் கொலை சம்பந்தமாக விசாரணைகள் இடம்பெற்ற பொழுது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் கட்டளையின் பேரில் துமிந்த சில்வா கேட்டுக்கொண்டதற்கமைய தானே பிரகீத்தை கொலை செய்து நீர்கொழும்புக் கடலில் புதைத்ததாகச் சாட்சியமளித்ததாக நியூலங்கா நியூஸ் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டது. ஆனால் அப்போது அந்த விடயம் அத்துடன் அமுக்கப்பட்டு விட்டது.

இப்போது மேற்படி கொலை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவரும் பாரத லக் ஷமன் கொலை சந்தேக நபர்களில் ஒருவரே. பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் பாரத லக் ஷமன் கொலையில் ஒரு முக்கிய சந்தேக நப என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியிருப்பினும் றகர் வீரர் கொலை பிரகீத் கொலை போன்றவற்றில் அரசியல் அதிகாரம் கொண்ட சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பதும், இவற்றில் ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் விசாரணைகளிலிருந்து வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்தப்படுகொலைகள் தொடர்பாகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியாமல் ஓர் உயர் அதிகாரம் கொண்ட சிலரால் தடுக்கப்பட்டதும் தெரியவருகின்றது.


அவர்களின் அதிகாரம் பறிபோன பின்பு புதைக்கப்பட்ட உண்மைகள் மெல்ல மெல்ல வெளிவர ஆரம்பித்துள்ளன. ஆனால் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்பட்டால் தற்சமயம் வெளிவந்து கொண்டிருக்கும் உண்மைகள் மேலும் ஆழத்துக்குப் புதைக்கப்படும் என்பதும், இந்த உண்மைகளை வெளிக்கொண்டு வர முயற்சி செய்பவர்களும் அந்த உண்மைகளுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டு விடுவார்கள் என்பதும் நிச்சயம்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பொழுதுபோக்கு விமான நிலையங்கள்









உலகின் தலைசிறந்த விமான நிலையங்களில் விமானத்திற்கென காத்திருக்கும் பயணிகளை கவரும் பொருட்டு அமைத்திருக்கும் பொழுதுபோக்கு அம்சங்களை பட்டியலிட்டுள்ளனர்.

தென் கொரியாவில் அமைந்துள்ள இந்த விமான நிலையத்தில் இரண்டு 4டி திரையரங்கம், ஆய்ந்தறியும் வகையில் ஒரு அருங்காட்சியகம், கோல்ஃப் மைதானம், இசை நடன அரங்கம் மற்றும் பனிச்சறுக்கு என அசத்தியுள்ளனர். உலகின் மிகவும் சுத்தமான விமான நிலையமும் இதுதான்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் அமைந்துள்ள எழில்மிகு பூந்தோட்டத்தை பராமரிக்கவே 11 முழு நேர பணியாளர்களை அமர்த்தியுள்ளனர்.

இங்கு 5 இலட்சத்திற்கும் அதிகமான பூச்செடிகள், நீர்வீழ்ச்சி எனப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அசத்தலான பல பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டிருப்பதால சிங்கை விமான நிலையத்தை உலகின் தலை சிறந்த விமான நிலையமென அறிவித்துள்ளனர்.

இதேபோன்று அனைத்து வசதிகளும் கொண்ட மலேசிய விமான நிலையம், துபாய் விமான நிலையம், கத்தார் விமான நிலையம், ஹாங்காங் விமான நிலையம் என அந்த பட்டியல் நீள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# வாட்டி எடுக்கிறது வாகனக் குத்தகை!

அண்மைக்காலமாக, வடக்கில் மிக குறிப்பாக யாழ்ப் பாண மாவட்டத்தில், குத்தகைக்கு (லீசிங்கிற்கு) வாகனங் களைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பும் அதற் கான உதவிகளும் "புழுத்துப்போயின" என்று (பேச்சு வழக் கில்) கூறும் அளவுக்கு நிலைமை மாறி உள்ளது.

வீதிப் போக்குவரத்தின் போது, வாகன நெரிசல் நாளாந்தம் அதிகரித்து வரும் தன்மையாலும் ஏனைய பல பாதிப்புகளை உண்டாக்குவதாலும், அது ஒரு வகையில் வெறுப்புக்கு உரியதாக மாறிவருகிறது.

இதற்கு மத்தியில், தவணை முறையில் குத்தகைக்கு வழங்கப்பட்ட வாகனங்களுக்கு, விதிக்கப்படும் அபராதக் கட்டணத்தை, சொப்ரெம்பர் மாதம் வரை நிறுத்தி வைக்குமாறு, நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார்; ஒரு வகையில் சலுகை செய்திருக்கிறார்.

"லீசிங்"கில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை நம்பி, தமது அன்றாட வருமானத்தை எதிர்பார்த்தவர்கள் தமது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

"லீசிங்"கின் உதவியுடன் தமது குடும்பத்தைக் காப் பாற்றலாம் என்று எண்ணி, வாகனங்களைப் பெற்றவர்கள் அல்லற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் மிகப் பலரின் மனைகளில் அடுப்பு எரிக்க முடியாத மிகுந்த கையறு நிலை உயர்ந்து நிற்கிறது.

அடுத்தவர் ஒருவர் குறிப்பிட்ட தொழிலைச் செய்து நல்ல வருமானம் பெற்றுச் சீவிக்கிறார் என்பதனை மனதில் வைத்து, தாமும் அவ்வழி செயற்பட முனையும் போக்கு, எமது சமூக மட்டத்தில் உள்ள பல குறைபாடுகளில் ஒன்றாகும்.

"லீசிங்" உதவியும் அத்தகைய பாதிப்பை உண்டாக்கி உள்ளதையே, அனுபவிக்கும் ஒவ்வா நிலைமையையே தோற்றுவித்துள்ளது; தோன்றி உள்ளது.

இதுவிடயத்தில் மற்றவர்களின் ஆலோசனையைப் பெறுவது, தமது வாழ் நிலை அந்தஸ்தைக் குறைத்து விடும் என்ற போக்கே எம்மவர் பலரின் ஒவ்வாத மனநிலையாக வளர்ந்துள்ளது.

ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு, தமக்கு விசுவாசமான நண்பரிடம், உறவினரிடம், குறிப்பிட்ட விடயம் குறித்த நன்மை தீமைகளை மனம் திறந்து அலசி ஆராயும் ஆக்கபூர்வமான போக்கும் எம்மில் மிகப் பெரும்பாலாரிடம் இல்லை. இதுவும் ஒரு வகைச் சாபக்கேடாகும்.

சமூக மட்டத்தில், திறந்த மனதுடன் செயற்படும் போக்கு எம்மிடையே மிகமிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. அதுவும் புட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றே.

மேற்போந்த விடயங்களில், எமது மக்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவை குறித்து ஆய்வு செய்து வெளிப்படுத்த வேண்டிய தேவையும் மிகப் பெரிய அளவில் உண்டு.

இவை குறித்து சமூகமட்டத்தில், சமூக நலன் விரும்பி கள், மனதார்ந்து ஒன்றிணைந்து செயற்படலாகாதா? நன்றும் தீதும் பிறர்தர வருவதில்லையே!

# சீனாவில் உள்ள அம்பாந்தோட்டைகள்

சீனாவின் பொருளாதாரம் ஏழு விழுக்காடு வளர்கின்றது. இந்த வளர்ச்சிக்கு அதன் ஏற்றுமதியும் அதனது உள்நாட்டு முதலீடும் நல்ல பங்களிப்பைச் செய்கின்றன. 2008ஆம் ஆண்டின் பின்னர் உலகப்



பொருளாதாரம் வீழ்ச்சியைச் சந்தித்த பின்னர் வேகமாக வளர்ந்து வந்த சீன பொருளாதாரம் தனது வேகத்தை இழந்து விட்டது. சீனா கடந்த பத்து ஆண்டுகளாக தனது பொருளா தாரத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல கீன்சிய முறைமை யும் நிதிக்கொள்கையாளர்களின் முறைமையையும் சேர்த்துக் கடைப்பிடிக்கின்றது. அதன்படி சீனாவில் பணப் புழக்கம் அதிகரிக்கச் செய்ததுடன் அரச முதலீடுகளும் அதிகரிக்கப்பட்டன.

**அரச செலவீனம்**

சீன ஏற்றுமதி 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆண்டு தோறும் 19 வீதம் வரை வளர்ந்து கொண்டிருந்தது. 2009ஆம் ஆண்டு சீன ஏற்றுமதி இருபத்தைந்து வீதம் வீழ்ச்சியடைந்தது. இதை ஈடு செய்ய சீனா தனது அரச செலவீனங்களைக் கண்டபடி அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசு செலவீனத்தின் மூலம் பொருளாதாரம் வளர்வதாயின் அது திறன்மிக்க வகையில் முதலிடப்பட வேண்டும். ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அவர்களைக் கொண்டு ஒரு பாரிய கிடங்கை வெட்டச் செய்து பின்னர் மேலும் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அக் கிடங்கை மூடச் செய்வது பொருளாதாரத் திற்குப் பயனளிக்காது. சீனாவின் 7 விழுக்காடு பொருளாதார வளர்ச்சி தற்போதைய உலகப் பொருளாதாரச் சூழலில் காத்திரமானதுதான். ஆனால் பல பொருளாதார நிபுணர்கள் சீனாவின் பொருளாதாரம் தொடர்பான புள்ளி விபரங்கள் நம்பகத் தன்மை வாய்ந்தது அல்ல என்கின்றனர்.

**சீனக் கூட்டாண்மைக் கடன்**

சீனாவில் உள்ள கூட்டாண்மை எனப்படும் பெரிய வியாபார அமைப்புக்களின் கடன் (Corporate Debt) உலகிலேயே பெரியதாகும். 2013ஆம் ஆண்டு இக்கடன் 142ரில்லியன்(14,200 கோடி) அமெரிக்க டொலர்களாக இருந்தது. 20ஐக்கிய அமெரிக்காவின் கூட்டாண்மை எனப்படும் பெரிய வியாபார அமைப்புக்களின் கடன் (Corporate Debt) 13.1ரில்லியன்கள் மட்டுமே. 2015இல் சீனக் கூட்டாண்மைகளின் மொத்தக் கடன் 16.1 ரில்லியன்கள் ஆகும். சீனக் கூட்டாண்மைகளின் கடன் சீனவின் மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 160 விழுக்காடாகும். 2014ஆம் ஆண்டு மார்ச் மாத முற்பகுதியில் சீன நிறுவனமான Shanghai Chaori Solar தனது கடன் நிலுவைகளைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டமை சீன பெரிய வியாபார அமைப்புக்களின் கடன் மோசமான நிலையில் இருப்பதைச் சுட்டிக் காட்டியது. கடன் மீளளிப்பு வலுக்களைத் தரவரிசைப் படுத்திப் பட்டியலிடும் நிறுவனமான Standard & Poor சீனாவின் கூட்டாண்மைகளின் கடன் பளு ஆபத்தான வகையில் உயர்வாக இருக்கின்றது என அறிவித்தது.

1. சீனப் பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைந்த படியால் கூட்டாண்மைகளின் நிதிநிலைமை பாதிப்படைந்தமை;

2. சீன அரசு நாட்டில் கடன் வழங்குதல்களைக் கட்டுப்படுத்தியமை;


3. அதிகரித்த வட்டி ஆகியவை சீனக் கூட்டாண்மைகளின் கடன் பளுவை அதிகரித்தன.

சீனக் கூட்டாண்மைகளின் இலாபத்திறன் ஆறு விழுக்காடாக இருக்கும் நிலையில் அவற்றின் கடன்களின் வட்டி விழுக்காடு ஏழிற்கும் அதிகமாக இருப்பது ஒரு நல்ல பொருளாதார அறிகுறியல்ல. சீனக் கூட்டாண்மைகளின் நிதிப் பாய்ச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராக இல்லாத்தால் கடன்பளு மேலும் அதிகரிக்கின்றது. நிதிப் பாய்ச்சல் குறைவதால் கடன் படுதலைத் தொடர்ந்து கடன் பளுவால் நிதிப்பாய்ச்சல் குறைதல் என்பது ஒரு தொடர் சுழற்சியாகி நிலைமையை மேலும் மோசமாக்கிக் கொண்டிருக்கின்றன. நிறுவனங்களின் கடனுக்கும் அதன்மொத்தப் பெறுமதிக்கும் உள்ள விகிதாசாரம் கடன் நெம்புத் திறனாகும்(debt leverage). சீனாவில் நிதி நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய கூட்டாண்மைகளின் கடன் நெம்புத் திறன் 113 விழுக்காடாக இருக்கின்றது. அதாவது ஒரு மில்லியன் பெறுமதியான ஒரு கூட்டாண்மை 113 மில்லியன்கள் கடன் பட்டுள்ளது. இந்தக் கடன் நெம்புத்திறன் குறைவதற்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை.



**வர்த்தகத்தைக் கணனி மயமாக்கும் முயற்சி**

சீனாவின் தொழிற்துறையில் ஏற்றுமதி அதிகரிப்பை நோக்காகக் கொண்டு அதிக முதலீடு செய்யப்பட்டது. ஆனால் தொழில் துறையில் முப்பது விழுக்காடு ஏற்றுமதி வீழ்ச்சியால் செயற்படாமல் இருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் செய்வது போல இலத்திரனியல் வர்த்தகத்தை (edcommerce) வளர்ப்பது, திறன்படு கைப்பேசிகளில் (smart phones) செயலிகள் (apps) மூலம் வர்த்தகங்களைப் பெருக்குவது, முகில் கணனிப் பயன்பாடு (cloud computing) போன்றவற்றிலும் 2015 மார்ச் மாதத்தில் இருந்து சீனா கவனம் செலுத்தி வருகின்றது.

**வட்டிக்குறைப்பு வேலை செய்வதில்லை**

பங்குச் சந்தையில் விலைகள் வீழ்ச்சியடைவதைத் தடுக்கவும் சீனப் பொருளாதாரத்தைத் தூண்டவும் சீனாவில் வட்டி விழுக்காடு 2014 நவம்பருக்கும் 2015 ஜூனுக்கும் இடையில் நான்கு தடவை குறைக்கப்பட்டது. சீனாவின் மொத்தத் தேசிய உற்பத்தியில் அரசத் துறை பெரும் பங்காற்றுகின்றது. அரசுத் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் வட்டி குறையும் போதோ அல்லது கூடும் போதோ பெரிய அளவில் பாதிக்கப்படுவதில்லை. முதலாளித்துவ நாடுகளில் வட்டிக் குறைப்பு பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதுபோல் முதலாளித்துவ நாடுகளில் அதிகரிப்பதில்லை.

**சீனாவின் லோக்கர் முயற்சி**

சீனா தனது பொருளாதார வளர்ச்சி வேகத்தைக் கூட்ட உள்ளூராட்சி மட்டத்தில் செலவுகளைக் கூட்டியது. உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரச வங்கிகள் கடன் கொடுத்து அவற்றின் முதலீடுகள் மூலம் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரிக்க சீனா முயன்றது. உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றை நடாத்தும் பொதுவுடைமைக் கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு முதலீடுகளைச் செய்தனர். இதனால் உற்பத்தி பெருகியதுடன் அதிக வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன.

**சீன அம்பந்தோட்டைகள்**

சீனாவின் உள்ளூராட்சி மன்றங்கள் செய்த முதலீட்டினால் அதன் மூலதனங்கள் அதிக வினைத்திறன் தரக்கூடிய வகையில் பகிரப்படவில்லை. பொதுவாக அரச முதலாளித்துவ நாடுகளில் முதலீடுகள் வினைத்திறனாகச் செய்யப்படுவதில்லை என்பது முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் முதலீட்டினால் அம்பாந்தோட்டையில் செய்தது போல போதிய அளவு பயன்படுத்தப் படாத நெடுஞ்சாலைகள் விமான நிலையங்கள் பல உருவாக்கப்பட்டன. சீனாவின் அபிவிருத்திக்கும் சீர்திருத்தத்திற்குமான ஆணைக்குழு 2014ஆம் ஆண்டு வெளிவிட்ட அறிக்கையின் படி 2009இற்கும் 2014இற்கும் இடையில் 6.8 ரில்லியன் (68 இலட்சம் கோடி) அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதி வினைத்திறன் குறைவாக முதலீடு செய்யப்பட்டுள்ளது என மதிப்பீடு செய்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக சீனாவில் செய்யப்பட்ட வினைத்திறனற்ற முதலீடுகள் பத்து ரில்லியன் (நூறு இலட்சம் கோடி அல்லது கோடானுகோடி) அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. சீன உள்ளூராட்சி மன்றங்களின் கடன் ஐந்து ரில்லியன் (ஐம்பது இலட்சம் கோடி) அமெரிக்க டொலர்களானது. இந்தக் கடன் பளுவைத் தணிக்க சீன அரசு உள்ளூராட்சி மன்றங்கள் கடன் முறிகளை விநியோகித்து நிதி திரட்ட அனுமதி வழங்கப்பட்டது.

**சீனாவின் உள்ளூராட்சி மன்றங்கள் செய்த முதலீட்டினால் அதன் மூலதனங்கள் அதிக வினைத் திறன் தரக்கூடிய வகையில் பகிரப்படவில்லை. பொதுவாக அரச முதலாளித்துவ நாடுகளில் முதலீடு கள் வினைத்திறனாகச் செய்யப்படுவதில்லை என்பது முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களின் கருத் தாக இருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் முத லீட்டினால் அம்பாந்தோட்டையில் செய்தது போல போதிய அளவு பயன்படுத்தப் படாத நெடுஞ்சாலைகள் விமான நிலையங்கள் பல உருவாக்கப்பட்டன.**

- வேல்தர்மா

**திறனற்ற முதலீடு**

தேவையற்ற கட்டிட நிர்மாணங்கள், மிகையான உட்கட்டுமானங்கள், பயனுறா (idle) உற்பத்தித்துறையில் முதலீடு ஆகியவற்றில் அரசு செய்த செலவுகளே 2008ஆம் ஆண்டின் பின்னர் சீனப் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பகுதியாக அமைந்தது. எழுபது விழுக்காடு செயற்திறன் கொண்ட தொழிற்துறையால் போதிய அளவு இலாபம் ஈட்ட முடியவில்லை. இதனால் சீனாவின் பங்குச் சந்தை ஜூலை மாதத்தில் கடும் வீழ்ச்சியைக் கண்டது. சீன அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளையும் மீறி பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. சீனப் பங்குகள் மூன்று ரில்லியன் (மூன்று இலட்சம் கோடி) அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இழப்பீட்டைச் சந்தித்தது. இந்த இழப்பீடு உலக வரலாற்றில் என்றும் ஏற்படாத சொத்திழப்பு எனக் கருதப்படுகின்றது.

**கண்டு பிடி சீனா கண்டுபிடி**

கடந்த முப்பது ஆண்டுகளாக சீனாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வந்த போதிலும், சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக வளர்ந்த போதிலும் (சில கணிப்பீடுகளின் படி முதலாவது) சீனா இன்னும் ஒரு அபிவிருத்தியடையாத நாடாகவே இருக்கின்றது. அது இப்போதும் ஒரு வளர்முக நாடாகவே இருக்கிறது. ஒரு நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக இருப்பதற்கு அதன் மொத்தத் தேசிய உற்பத்தி (gross domestic product (GDP)), தனிநபரின் சராசரி வருமானம் (per capita income), கைத்தொழில்மயமான நிலை (level of industrialization), பரவலான கட்டமைப்பின் அளவு (amount of widespread infrastructure), பொதுவான வாழ்க்கைத்தரம் (general standard of living) ஆகியவை கருத்தில் கொள்ளப்படும். இந்தவகையில் ஆசியாவில் ஜப்பானும் தென் கொரியாவுமே அபிவிருத்தியடைந்த நாடுகளாக இருக்கின்றன.

Sony, Toyota, Samsung, Hyundai, LG இப்படிப் பல வர்த்தகப் பெயர்கள் எமது நாளாந்த வாழ்வில் அடிபடும் பெயர்களாக இருக்கின்றன.

(19ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வேலை கிடைச்சாச்சு...

● ஆ. முல்லைத்திவ்யன்



பள்ளிக்கூட வாழ்க்கை முடிந்து இரண்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டன. எத்தனையோ வேலைக ளுக்கு விண்ணப்பிச்சும் வேலை கிடைத்தபாடில்லை. இந்தக் கால கட்டத்தில் யாருக்கும் பின்னால வாலைப் பிடிச்சாத் தான் வேலை. இல்லாட்டி மூன்று நாலு இலட்சம் குடுத்தாத் தான் வேலை.

"தம்பி யாழவா இந்த தேத்தண்ணிய குடிச்சிட்டு புதுக்குடியிருப்பு சந்தைக்குப் போயிற்று வா. நல்ல முளைக்கீரை வந்திருக்கும்" மத்தியானம் சோத்துக்கு கடைவம் வேளைக்கு போயிற்று வா முடிஞ்சுபோம். குடிசைக்குள் இருந்த யாழவனின் தாய் பார்வதியின் குரல்.

தாய் குடுத்த ஐம்பது ரூபாய் காசை வாங்கிக். கொண்டு சைக்கிளின் மிதிபலகையை சுழற்றுகிறான் யாழவன்.

சைக்கிளில் ஏறுகின்ற போதே மனதிலே கவலை. கிழமையில் பெரும்பாலான நாள்கள் பருப்பும் கீரையும் தான் மத்தியான சோற்றுக் கறிகளாயிருக்கும். அவற்றைத் தான் உண்பதற்கு ஒரு போதும் கவலைப் பட்டதில்லை. பருப்பும் கீரைக்கறியும் தான் நெடுக சமைக்கிறியள் எண்டு அவன் தன் அம்மாவுடன் சண்டை பிடிச்சதும் இல்லை. ஆனால் தங்கச்சியும் அக்காவும் தொடர்ந்தும் பருப்பும் கீரையும் தான் சாப்பிட வேண்டியிருக்கு எனக் கவலைப்பட்டான்.

யாழவனை சின்ன வயதிலிருந்தே எனக்கு நல்லாத் தெரியும். அவனும் நானும் ஒரே விளையாட்டு கழகம் தான். மாலை நேரங்களில் ஒளிஅரசி விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாடினாங்கள். மனதளவில் மிகவும் மென்மையானவன்.

கடைசிச் சண்டையோட 'நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்திட்டம். யாழவன்ர குடும்பம் முல்லைத்தீவில் தான் இருந்தது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் அண்டைக்கு தான் அவனை புதுக்குடியிருப்பு சந்தையில கண்டனான். என்னைக் கண்டவுடன் கட்டி அணைச்சான். எப்படி இருக்கிறாய் வேலவன்? இருக்கிறன் யாழவன். நீ எப்படியடா? பரவாயில்லை இருக்கிறன். ஒருவித கவலையோடும் விரக்தியோடும் பதிலளித்தான்.

கையிலே இரண்டு முளைக்கீரைப் பிடிகள் வாங்கி வைத்திருந்தான். கிழிந்து போன சாரத்தை மடித்துக்கட்டியிருந்தான். கறள் கட்டிப்போன சைக்கிளை 'எரிந்து போன தேக்குமரத்தோட சாத்தினான்.

எதையோ கதைக்க நினைக்கிறான். ஆனால் யாழவனால் எதையும் கதைக்க முடியவில்லை. என்ன யாழவன் அம்மா அப்பா எல்லாம் சுகம் தானே... மிகவும் சோர்வடைந்தவனாய் என் முகத்தை உற்றுப் பார்த்தான். வேலவன் அம்மா சுகமாயிருக்கிறா. அப்பாக்கு நடந்தது உனக்குத் தெரியாதோ... நாங்கள் இடம் பெயர்ந்து புதுமாத்தளனுக்கு போகேக்க அப்பா செல்லடிபட்டு விழுந்திட்டார். நானும் அக்காவும் தூக்கி கொண்டு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு போனனாங்கள். ஆனாலும் அப்பாவைக் காப்பாத்த முடியலே. அவன் சொல்லுகின்ற போது முகம் கறுத்து வியர்த்திருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது தான் போட்டிருந்த நீள சேட்டின் பின்புற முழங்கையால் கண்களை துடைத்துக் கொண்டான்.

இப்ப தூரத்தே இராணுவ கவச வாகனம் ஒன்று செல்கிறது. வீதியோரம் சொத்தி நாய் ஒன்று ஊளையிடுகிறது. இரணைபாலை சந்தி ஊடாக ஒரு இரு இறுதி ஊர்வலம் போகிறது நாலைந்து பேருடன்.

மிகவும் அமைதியாக இருந்தவன் மௌனத்தைக் கலைத்தான். அரசாங்க வேலைக்கு விண்ணப்பப்படிவம் எதுவும் வந்தா எனக்கு எடுத்து தா வேலவன்.

யாழவன் உன்ர திறமைக்கும் நல்ல குணத்துக்கும் உனக்கு நல்ல வேலை கிடைக்கும் ஒண்டுக்கும் கவலைப்படாதே நான் யாழ்ப்பாணம் போகணும் போயிற்று வாறன். வேலவன் புறப்பட்டான். கீரைப் பிடிகளை வாங்கிக் கொண்டு சைக்கிளை மெல்ல சுழற்றினான் யாழவன். ஆலடி வாசிகசாலையில் சைக்கிளை நிறுத்திவிட்டு இன்றைய பத்திரிகைகளில் ஏதாவது வேலைக்கு விண்ணப்பம் வந்திருக்கா என ஒவ்வொரு பக்கத்தையும் ஆவலோடு புரட்டிப் பார்த்தான். ஏமாற்றமே மிஞ்சியது. வீடு வந்து சேர்ந்தான். மனம் தளர விடவில்லை.

அவன் வீட்டுக்கு அப்பான்ர சினேகிதம் எண்டு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு ஒருவர் வந்தார்.

தம்பி யாழவன் உனக்கு விவசாயத் திணைக்களத்தில வேலை எடுத்துத்தாறன். ஆனால் வேலை கிடைக்க முதல் ஒரு இலட்சம் தர வேணும். வேலை கிடைச்சாப் போல ஒண்டு தரோணும். கொஞ்சப் பேர் இப்படியும் கஷ்ரப்பட்டாக்களிட்ட வறுகி சீவிக்கிறாங்கள். எங்கட அம்மாவும் இந்தாள்ன்ர கதையை நம்பி அக்கான்ர காப்பையும் தங்கச்சியின்ர மோதிரத்தையும் அடகு வைச்சோ அல்லது வித்தோ இந்த விவசாயத் திணைக்கள வேலை எடு தம்பி எண்டு அம்மா சொன்னா.... நான் அம்மாவை பேசிப்போட்டன். இவங்கள் ஏமாத்து பேர் வழிகள். சில மாதங்கள் உருண்டோடின.

பத்திரிகையில் ஒரு வேலைக்கு விண்ணப்பம் கோரியிருந்தார்கள். ஆரம்பச் சம்பளம் பதின்னான்காயிரம் ரூபா. பயிற்சிக் காலம் கொழும்பில இரண்டு வருடங்கள். அங்க தான் வேலை செய்யோணும். எதுக்கும் ஒருக்கா நேர்முகத்தேர்வுக்குப் போவம் என சிந்தித்துக் கொண்டு நேர்முகத்தேர்வுக்கு தயாரானான் யாழவன்.

நேர்முகத்தேர்வுக்கு போடுறதுக்கு சப்பாத்துக்கு கூட காசில்லை. யாழவன்ர அம்மா பக்கத்து வீட்டு நடா அண்ணாகிட்ட வங்கித் தந்த சப்பாத்தைத் தான் யாழவன் போட வேண்டியிருந்தது.

எப்படியும் உனக்கு வேலை கிடைச்சிடும் யாழவா... ஒண்டுக்கும் கவலைப்படாத போற வழில முருகன் கோவில்ல இந்தத் தேங்காயை உடைச்சிட்டுப் போ.......

தாய் சொன்ன வார்த்தைகள் மனதிலே உற்சாகத்தைத் தர யாழ்தேவியின் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

யாழ்.தேவி மெல்ல மெல்ல அசையத் தொடங்கியது. அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஓடி விளையாடிய ஊர், தினமும் சோறு ஊட்டிய அம்மா, தினமும் சின்ன சின்ன சண்டை பிடிக்கும் தங்கச்சி, பாசமுள்ள அக்கா எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்து கொழும்புக்கு மனதளவிலே ஆதங்கப்பட்டான் யாழவன். யாழ். தேவி இப்போது வவுனியா தரிப்பிடத்தை அடைந்திருந்தது.

"எப்படியாவது வேலை கிடைச்சிடோணும். கடவுளே எப்படியும் வேலை கிடைக்கச் செய். மனதளவிலே கடவுளிடம் வேண்டினான்.

யாழ். தேவி இப்போது கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்திருந்தது. மெல்ல இறங்கின்ான் யாழவன். எங்கையாவது கொஞ்ச காசில அறை வாடகைக்கு இருக்குதோ எண்டு விசாரித்தான். ஒரு மாதிரி ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபா வாடகை கட்டணம் செலுத்தி அடுத்த நாள் நேர்முகத் தேர்வுக்கு தயாரானான்.

தங்கச்சி அழுத்தி கொடுத்த ஜீன்சையும் சேட்டையும் எடுத்துக் கட்டிலில் வைத்தான். அம்மா பக்கத்து வீட்டில் வாங்கித் தந்த சப்பாத்தை ஈரத் துணியால் துடைத்துக் கொண்டான். குளித்து விட்டு கண்ணாடியிலே தனது உருவத்தைப் பார்த்தான். கண்ணாடியிலே அம்மா, அக்கா, தங்கையின் உருவங்களே கண்களில் தெரிந்தது.

கடவுளைப் பிரார்த்திக் கொண்டு நேர்முகத்தேர்வுக்குப் புறப்பட்டான். ஒரு மாதிரியாகத் நேர்முகத் தேர்வு நடக்கும் இடத்தை விசாரித்துச் சென்றடைந்தான். நிறையப்பேர் வந்திருந்தாங்கள். அடுத்த பெயர் யாழவன் பெயர். யாழவன். யாழவன் வெளியில் நின்ற ஊழியர் கூப்பிட்டார். மிகவும் தயக்கத்துடன் தனது சுயவிபரக்கோவையுடன் உள்ளே நுழைந்தான். தம்பி எங்கையிருந்து வாறீங்கள்? கொன்னைத் தமிழில கேட்டார் நேர்முக தேர்வு நடத்துனர். நான் சேர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு. கொழும்பில எங்கை வேலை எண்டாலும் செய்வியா? ஓம் சேர். தம்பி உனக்கு கட்டுபெத்த கிளையில் வேலை கிடைச்சிருக்கு. அப்படியோ சேர்? மிக்க நன்றி. மிகுந்த சந்தோசத்துடன் தான் தங்கியிருக்கும் அறை நோக்கி விரைந்தான் யாழவன்.

வந்தவுடன் அவன் அம்மாவின் மிஸ்கோல் நிறைய வந்திருந்தது. ஏன் அம்மா கோல் எடுத்திருப்பா என சிந்தித்துப் பார்த்தவன்..... அம்மா நேர்முகத்தேர்வின் முடிவு அறியத்தான் எடுத்திருப்பா போல. அம்மாவுக்கு அழைப்பை எடுத்தான் யாழவன்.

"அம்மா எனக்கு வேலை கிடைச்சிட்டு இரண்டு வருடம் கொழும்பில தான் வேலை. அக்காக்கும் தங்கச்சிக்கும் சொல்லுங்கோ" என்று சொல்லி முடிக்கிறதுக்குள்ளே ' எட யாழவா நீ முந்தி ஒருக்கா முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை எழுதினி யெல்லோ. அதில் நீ தெரிவாகி இருக்கிறாய். இண்டையான் பேர்ப்பர்ல உன்ர பேர் வந்திருக்கு. அப்படியோ அம்மா யாழவன் உள்ளம் இனித்தது.

மறுநாள் காலையே சொந்தக்கிராமம் புறப்பட தயாரானான். யாழ் தேவியில் ஏறி அமர்ந்தான். முருகன் என்னைக் கைவிடேல்லை எண்டு பெருமூச்சு விட்டான் யாழவன். பனைமரங்கள் எழுந்து நின்று வரவேற்றன. உப்பளக் காற்று மேன தடவிச் செல்ல சொந்த ஊரில் கால் பதித்தான். சொந்தக் காலில் எப்போதும் நீ நிக்கோணும் என்ற தனது அப்பாவின் அறிவுரையை நினைத்தபடியே ...... வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைப் பறித்த கணிதம்!

- வசந்தா அருள்ரட்ணம்



அம்மா என்னை 'எக்ஸாம்' எழுத விடமாட்டினமாம். அனுமதி அட்டை வந்தது. ஆனால் தரமாட்டினமாம். நான் உங்களை ஏமாற்ற விரும்பல. நான் உங்கள் எல்லோரையும் 'மிஸ்' பண்ணுறன். இது தான் திவ்வியாவின் இறுதி வரிகள்.

திவ்வியா என்ற மாணவி ஏன் இந்த முடிவெடுத்தாள்..? நடந்தது என்ன..? என பொலிசார் தேடிய போது சிக்கிய கடிதத்தின் வரிகளே இவை.

வவுனியா, பண்டாரிகுளம் விபுலானந்தா கல்லூரியில் உயர்தரம் கலைப் பிரிவில் கல்வி கற்று வந்த மாணவியே குணசேகரம் திவ்வியா.

ஒரு அண்ணா, ஒரு அக்கா, தம்பி என அழகிய குடும்பத்தில் பிறந்த திவ்வியா சிறு வயதில் இருந்து கல்வியில் ஆர்வத்துடன் செயற்பட்டாள்.

ஆனால் அவளுக்கு இறுதி வரை கணிதம் மட்டுமே எட்டாக்கனியாக இருந்தது. கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய திவ்வியா உயர்தரம் கற்பதற்கான சிறந்த பெறுபேற்றை பெற்ற போதும் கணித பாடத்தில் அவளால் சித்திபெற முடியவில்லை.

அவளுடைய பெறுபேற்றை அடிப்படையாக கொண்டு கணிதத்தை பின்னர் எடுத்து தருமாறு கூறி பாடசாலையில் உயர்தரம் கற்பதற்கு அனுமதியும் கிடைத்தது.

தனது குடும்பம் வறுமைக்கு மத்தியிலும் என்னை கஸ்ரப்பட்டு படிக்க வைக்கிறது. நான் எப்படியாவது பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் படித்த திவ்வியா அதன் பின் நடந்த சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட பரீட்சையில் தோற்றிய போதும் அவளால் நல்ல பெறுபேற்றை பெறமுடியவில்லை. இருப்பினும் அவள் உயர்தரம் தொடர்ந்து கற்க அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகிய கல்விப் பொது உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருந்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைக்கு வந்தன.

அனைவருக்கும் அனுமதி அட்டைகளை வழங்கிய விபுலானந்த கல்லூரி அதிபர் திவ்வியாவுக்கு மட்டும் அனுமதி அட்டையை கொடுக்க மறுத்தார்.

கணித பாடத்தில் சித்தி பெறாமையால் அனுமதி அட்டை தரமுடியாது என பதில் அளித்தார். சிறந்த பெறுபேற்றை பெறவேண்டும் என ஆர்வத்துடன் படித்த திவ்வியாவுக்கு பரீட்சை எழுத அனுமதி அட்டை வழங்க மறுத்தமையால் மனவிரக்தி ஏற்பட்டுள்ளது.

பாடசாலையில் பல தடவை தனது அனுமதி அட்டையை கேட்டுள்ளாள். ஆனால் அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.


அவள் கற்கும் பாடங்களில் ஒன்றாகிய தமிழ் பாட பரீட்சை கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமையே நடக்க இருந்தது.

அதற்குள் தனது அனுமதி அட்டையை அதிபர் தந்து விடுவார் என நம்பியிருந்தவள் அது கிடைக்காமையால் ஏமாற்றம் அடைந்தாள். இதனால் கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் வீட்டில் இருந்து புறப்பட்டாள் திவ்வியா.

இருள் மெல்ல மெல்ல பரவத் தொடங்கியது. வழமையாக வேளைக்கு வீட்டுக்கு வந்துவிடும் திவ்வியாவை அன்று மட்டும் நீண்ட நேரமாகியும் காணாததால் தேடத் தொடங்கினர்.

அக்கம் பக்கம், நண்பர்கள் வீடு என எல்லா இடமும் தேடியும் திவ்வியா கிடைக்கவில்லை. இறுதியில் இரவு 7 மணியளவில் திவ்வியாவின் வீடு அமைந்திருந்த வேப்பங்குளம், 7ஆம் ஒழுங்கையில் வீட்டிற்கு அண்மையில் இருந்த பொதுக் கிணற்றில் திவ்வியா இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டாள்.

உடனடியாக பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலம் மீட்கப்பட்டு மரணத்திற்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணை நடைபெற்றது. இதியில் திவ்வியா எழுதி வைத்த கடிதம் சிக்கியது.



கணித பாடத்தில் நான் சித்தியடையவில்லை என்பதால் எனக்கு பரீட்சை அனுமதி அட்டை தரமாட்டார்களாம். அம்மா என்னை கஸ்ரப்பட்டு செலவழித்து படிப்பீங்கிறீங்க. ஆனால் நான் பரீட்சை எழுத முடியாது. நான் ஏமாற்ற விரும்பல. அம்மா இனி எனக்கு சாப்பாடு தீத்தி விடமாட்டா.

எனக்கு தூக்கமே வரவில்லை. உமையவன், கபிலன், மதுஜா நீங்கள் நல்லா படித்து பரீட்சை எழுதுங்கள். நான் உங்கள் எல்லோரையும் 'மிஸ்'பண்ணுறன். இது தான் திவ்வியாவின் இறுதி வரிகள்.

சடலத்தை பார்வையிட்ட வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் சடலத்தை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில் வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவ பரிசோதனையின் பின்னர் நீரில் திவ்வியா குதித்தமையால் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக திடீர் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

சம்பவத்தையடுத்து தனது தொலைபேசிகளை அணைத்துவிட்டு பாடசாலை அதிபர் தலைமறைவாகியுள்ளார்.

குறித்த விடயம் வலயக்கல்வித் திணைக்களம் ஊடாக கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அதிபர் தற்காலிகமாக உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார். தற்போது வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சக மாணவிகளும் நண்பர்களும் கனத்த மனங்களுடன் கண்ணீர்விட்டபடி பரீட்சைக்கு சென்று வருகின்றார்கள். ஆர்வத்துடன் படித்த திவ்வியா மட்டும் படமாக இருந்து அவர்களை வழி அனுப்பி வைக்கிறாள்.

தோல்விகளுக்கு தற்கொலை தான் முடிவு என்றால் இந்த பூமியில் யாருமே வாழமுடியாது. அனுமதி அட்டையை பெறுவதற்கு திவ்வியா வேறு வழிகளில் பாடசாலையை அணுகியிருக்க முடியும்.

ஆனால் அவசரப்பட்டு எடுத்த இந்த விபரித முடிவு அவள் மேல் பாசத்தை வைத்திருந்த அவள்

(19 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலவிதங்களில் மணிமுடி சூட்டிக் கொண்ட கிரீஸ் இன்று உலக அளவில் தலைகுனிந்து நிற்கிறது. பொருளாதார நெருக்கடியில் திவாலாகும் நிலைக்கு அது வந்து விட்டது. பெருங்காயமாய் கிரீஸ் உலக அரங்கில் மணத்துடன் வலம் வந்த நாட்கள் உண்டு. பெரும் காயத்துடன் இன்று அது தள்ளாடும் காட்சி விசனத்துக்கு உரியதுதான். 'ஐரோப்பாவின் நோயாளி' என்று துருக்கியைத்தான் சொல்வார்கள். ஆனால் இன்றைய நிலையில் கிட்டத்தட்ட கோமா கட்டத்தில் இயங்குகிறது கிரீஸ். அப்படி ஒரு பொருளாதாரச் சிக்கல்.**

# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 01



உலகின் தலைசிறந்த காவியங்கள் என்ற பட்டியலில் நிச்சயம் இடம் பெறக்கூடியன இரண்டு, இலியட் மற்றும் ஒடிஸி. இவற்றை எழுதியவர் ஹோமர். பார்வை இல்லாமலேயே இந்தச் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்.

மேற்கத்திய இசை ரசிகர்களால் மறக்க முடியாத ஒரு பெயர் யானி. அவரது ஒரு 'டசினு'க்கும் மேற்பட்ட இசை ஆல்பங்கள் தொடர்ந்து விற்பனையில் முதலாம் இடத்தில் இருந்தன. இசைத்துறைக்கு வருவதற்கு முன்பேகூட சாதனை படைத்தவர் இவர். தனது 14வது வயதிலேயே தேசிய அளவில் 15 மீட்டர் நீச்சல் போட்டியில் முதலிடம் பெற்றவர்.

மேற்கத்திய தத்துவத்தின் பிதாமகன் என்று இன்றளவும் கருதப்படுபவர் சாக்ரடீஸ். பல நூறாண்டுகளைத் தாண்டியும் இவரது சிந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இன்றைய அரசியல் இயங்குதளத்தை அந்தக் காலத்திலேயே தெளிவாகப் பதிவு செய்தவர் ப்ளாட்டோ. ஜனநாயகத்துக்கு எதிரானவர். என்றாலும் சாக்ரடீஸின் சிஷ்யரான இவரது சிந்தனைகள் இன்றளவும் மதிக்கப்படுகின்றன. உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழகம் என்று கருதப்படுகிறது ப்ளாட்டோ அக்கடமி.

ஹிபோக்ரடீஸ் பெரும்புகழ் பெற்ற ஒரு மருத்துவர். நோய்களைப் போக்குவதற்கு மருத்துவம், தத்துவம் இரண்டையுமே பயன்படுத்தியவர். தன்னையே குணப்படுத்திக்கொள்ளும் ஆற்றல் மனித உடலுக்கு உண்டு என்றவர். இன்றளவும் இந்திய மருத்துவர்கள் கூட இவர் பெயரில்தான் உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள்.

குளியல் அறையிலிருந்து, 'யுரேகா, யுரேகா' என்று கத்தியபடி ஓடிவந்த ஆர்கிமிடீஸின் அறிவியல் விதிகளை மாணவர்கள் அறிவார்கள். இவர் ஒரு தலைசிறந்த வானியல் நிபுணரும்கூட.

நிகோஸ் கஸன்ட்ஜாகிஸ் என்ற எழுத்தாளரின் நூல்கள் மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டவை. இவர் எழுதிய "த லாஸ்ட் டெம்டேஷன் ஆப் கிரைஸ்ட்" என்ற நூல் மிகவும் மதிக்கப்பட்ட ஒன்று. அதிர்ச்சி அலைகளையும் இது கிளப்பியது. ரோமன் கத்தோலிக்க தேவாலயம் இந்த நூலைத் தடை செய்தது. இவர் இறக்கும்போதுகூட இவரது உடலை நகர எல்லையில் அடக்கம் செய்ய தேவாலய தலைமை அனுமதிக்கவில்லை. தனது கல்லறையில் "நான் எதற்கும் ஆசைப்படவில்லை. நான் எதற்கும் பயப்படவில்லை. நான் சுதந்திரமானவன்" என்ற வாக்கியங்கள் பொறிக்கப்பட வேண்டும் என்று உயில் எழுதிவிட்டுதான் இறந்தார்.

அரிஸ்டாட்டில் ஒனாஸிஸ் உலகின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவராகக் கருதப்பட்டவர். அமெரிக்க அதிபர் கென்னடி இறந்த பிறகு அவரது மனைவி ஜாக்குலினைத் திருமணம் செய்து கொண்ட , போது ஒனாஸிஸ் மேலும் அதிகமாக அறியப்பட்டார்.

ஜியாமெட்ரியின் தந்தை என்று கருதப்படும் யூக்லிட் உலகின் தலைசிறந்த கணித மேதைகளில் ஒருவர்.

ஈஸாப் கதைகளை அறியாதவர் உண்டா? மாபெரும் பலம் கொண்ட ஹெர்குலிஸ் என்ற மாவீரனைக் கேள்விப்படாதவர்கள் உண்டா?

டென்னிஸ் ரசிகர்களிடம் பீட் சாம்ப்ராஸ் என்று கூறிப்பாருங்கள். அவர்கள் முகத்தில் ஓர் ஒளி பாயும்.

இதெல்லாம் சரி, நாடுகள் குறித்த தொடரில் எதற்காக பல்வேறு வி.ஐ.பிக்களைப் பற்றிய குறிப்புகள் என்று நீங்கள் கேட்பீர்களாஎன்ன? விடையைத்தான் நீங்கள் இந்நேரம் ஊகித்திருப்பீர்களே. அது சரியானதுதான். மேலே குறிப்பிட்ட அத்தனை சாதனையாளர்களும் கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலத்துக்கும், அறிவியலுக்கும் எண்ணற்ற வார்த்தைகளை நன்கொடையாக அளித்துள்ள மொழி கிரேக்கம்.

இப்படிப் பலவிதங்களில் மணிமுடி சூட்டிக் கொண்ட கிரீஸ் இன்று உலக அளவில் தலைகுனிந்து நிற்கிறது. பொருளாதார நெருக்கடியில் திவாலாகும் நிலைக்கு அது வந்து விட்டது.


பெருங்காயமாய் கிரீஸ் உலக அரங்கில் மணத்துடன் வலம் வந்த நாட்கள் உண்டு. பெரும் காயத்துடன் இன்று அது தள்ளாடும் காட்சி விசனத்துக்கு உரியதுதான்.

'ஐரோப்பாவின் நோயாளி' என்று துருக்கியைத்தான் சொல்வார்கள். ஆனால் இன்றைய நிலையில் கிட்டத்தட்ட கோமா கட்டத்தில் இயங்குகிறது கிரீஸ். அப்படி ஒரு பொருளாதாரச் சிக்கல்.

வங்கிகளுக்கெல்லாம் விடுமுறை. பங்குச் சந்தை மூடப்பட்டது. ஏ.டி.எம்.களை வைத்துக் கொண்டு பணத்தை எடுத்துக் கொள்வதில் கட்டுப்பாடுகள்.

என்ன நடந்தது கிரீஸில்? என்ன நடக்கிறது அந்த நாட்டில்?

**(வளரும்)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ஆதங்கன்

**உலகம்-1**

போனகிழமை கொழும்புக்கு ஒரு பயணம். விடியப்பிறம் போனதால நித்திரையால எழும்பேக்க சூரியன் உச்சிக்கு வந்திட்டு. அவசரமா ஒரு காக்கா குளியலை முடிச்சிட்டு, உடுப்பைத் தேடினா எல்லாம் கசங்கிப் போய்க் கிடந்தது. வெளிநாட்டால வந்த மச்சான் தந்த ஒரு வெள்ளை 'ரீசேர்ட்' மட்டும் கொஞ்சம் பார்வைக்கு நல்லாக் கிடக்க, அதுக்கு கணக்கா ஒரு 'சோர்ட்ஸை' யும் போட்டுக் கொண்டு 'லொட்ஜ"க்கு' வெளியால வந்தன். கையில 'ஐபாட்'டையும் எடுக்க மறக்கேலை. அப்பிடியே கால் தன்ர பாட்டில சாப்பாட்டு கடைக்கு என்னை இழுத்துக் கொண்டு போக, ஒரு'பிடி பிடிச்சிட்டுத்தான் நிமிர்ந்தன். எலியை விழுங்கின சாரைப்பாம்பு மாதிரி கதிரையை விட்டே எழும்பேலாம எழும்பினன்.

நேரத்தைப்பாத்தன். 12.10 தான்.

'எயார்போட்டு'க்கு போக இன்னும் 11 மணித்தியாலம் கிடக்கு. என்ன செய்யலாம்?

யோசிச்சுக்கொண்டு திரும்பேக்க ஏதோ ஒரு 'பேப்பரி'ல 'பாபநாசம்'பட விளம்பரம்.

சும்மா நிக்கிற நேரத்துக்கு படத்தைப் பாக்கலாம் தானே.

வந்த 'ஓட்டோ' ஒண்டில ஏறி போக வேண்டிய 'தியேட்டர்' பேரைச் சொல்லிப்போட்டு இருந்தன்.

ஓட்டோக்காரன் 'சைட்' கண்ணாடியில நோட்டம் விட்டிருக்க வேணும்.

வெள்ளை 'ரீசேட்'.'சோர்ட்ஸ்'. 'ஐபாட்'. இதுகளைப் பாத்திட்டு அவன் பாதித்தமிழில கேட்டான்,

வெளிநாடோ நீங்க?

எனக்கெண்டா புளுகம் பிடிபடேலை. ஏன் வீணா வந்த பேரை விடுவான்?

ஓம்.

எந்த நாடு துரை?

'சுவிஸ்'

சொல்லிப்போட்டு , சுவிஸ் என்ன கலராயிருக்குமெண்டு யோசிச்சுப் பாத்தன். பிடிபடேலை.

நல்லம். கமல் படமா பாக்க போறீங்க. கமல் நல்லம். ஆனா நான் விஜய் பிடிக்கும்.மை வைப் தமில் தான் சொல்லிவிட்டு ஓட்டோவின் பின்பக்கம் ஒட்டியிருந்த விஜயின் போட்டோக் களைக் காட்டினான். நான் அதைப் பாத்திட்டு றோட்டுப் பக்கமா கண்ணைத் திருப்பினன்.

ஆனா அவன் விடுற மாதிரி இல்லை.

சரி துரை, 'ஈவினிங்' ஒரு 'மசாஜ்' போட போவமா?

அவன் எந்த 'மசாஜை' சொல்லுறான் எண்டு விளங்கினாலும்,

வேண்டாம். நேற்றுத்தான் தலைமயிர் வெட்டிப்போட்டு சலூனில 'மசாஜ்' போட்டன் எண்டு அப்பாவி மாதிரி சொன்னன்.

சடக்கெண்டு திரும்பி ஒருமாதிரிப்பாத்தான்.

ஐயோ துரை. இது வேற. குட்டியள் போட்டுவிடும் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சொன்னான்.

நான் கேக்காத மாதிரி இருக்க, அவன் எனக்கு இன்னொரு தூண்டிலைப் போட்டான்.

'மசாஜ்' மட்டுமில்ல. வேற 'மசாஜ்ஜு"க்'கும் குட்டியள் இருக்கு. தமிழ், சிங்களம், முஸ்லிம் குட்டியள். 'ஸ்கூல்' குட்டியளும் இருக்கு

இந்த இடத்திலதான் ஐம்புலனும் அடக்கி, ஒரு துறவி மாதிரி வேண்டாம். 'நொட் இன்ரஸ்ட் எண்டன்'.

எப்பிடி அப்பிடி நடிச்சன் எண்டு இதுவரைக்கும் எனக்கும் விளங்கேலை.

ஓஓ! நீங்க வெளிநாடு தானே. அங்க உள்ள வெள்ளைக்கார குட்டியளோட போயிருப்பிங்க. ஆனா சிறிலங்கா குட்டித்தான் நல்லம். சொல்லிப்போட்டு ஒரு சின்னக் கார்ட்டை எடுத்து நீட்டினான்.

அந்த ஓட்டோக்காரனின் பேரோடு, ரெலிபோன் நம்பரும் அந்தக்காட்டில இருந்திச்சு.

படம் முடிய கோல் பண்ணுங்க. விரும்பின குட்டியளிட்ட போகலாம்

தியேட்டரில் இறக்கிட்டு அவன் சிநேகிதமா ஒரு சிரிப்போட, மச்சான் எப்பிடியும் 'மசாஜ்ஜு"'க்கு வருவார் எண்ட மனக்கணக்கைப் போட்டபடி வெளிக்கிட்டுட்டான்.

குட்டி,குட்டி எண்டுறியே அது என்ன குட்டி? வாழைக்குட்டியா? ஆட்டுக்குட்டியா? எண்டு கேக்கிறதுக்கிடையில போட்டான்.

படம் முடிஞ்சுது.

இரவு ஒரு சிநேகிதனோட 'கே.எப்.சி'யில சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்க, 'மசாஜ்' ஓட்டோக்காரன்ர கதையைச் சொன்னன்.

சலூன்ல 'மசாஜ்' போட்டதை நீ சொன்னதும் அவன் மனசுக்க உன்னை அவன் காறித்துப்பி இருப்பான். ஆனா உவங்களுக்கு இப்பிடித்தான் சொல்ல வேணும் எண்டு சொல்லி விழுந்து விழுந்து சிரிச்சான்.

சிரிச்சு முடிய கண்ணில சிரிப்புக்கண்ணீரோட கேட்டான்,

மச்சான் அந்த ஓட்டோக்காரன்ர கார்ட்டை எனக்கு தாவன். பிரியோசனப்படும் .

**உலகம்- 2**

மறதியெண்டா அதுக்கு மறு பெயர் நானாத்தான் இருப்பன். இந்த மறதியால கனநாள் மத்தியானம் சாப்பிட்டதையே மறந்து நாலைஞ்சு முறை திரும்ப திரும்ப சாப்பிட்டிருக்கிறன்.(இப் பிடி வெக்கமில்லாமத் தின்றதுக்கு மறதி ஒரு சாட்டு?) . குளிக்க மாலே மாசக்கணக்கா இருந்திருக் கிறன்.(எட, இது வேற). இப்பிடி மறதியின் மகாத்மாவான எனக்கு ஒவ்வொரு நாளும் செய்ய வேண் டிய வேலையளே நொண்டிக் கொண்டிருக்கேக்க ,வருசத்துக்கு ஒருமுறை கட்டுற மோட்டர் சைக்கிள் ரக்ஸ் விசயம் மட்டும் எப்பிடி நினைவுக்கு வருமாம்.

அனேகமா பொலிஸ்காரர் மறிச்சு, செக் பண்ணேக்கதான், ஐயோ! டேட் முடிஞ்சு போச்சே எண்டு தலையைச் சொறிஞ்சு, பொலிஸுக்கு சப்போர்ட்' பண்ணிட்டு, ரக்ஸ் எடுக்கிறது தான் என்ர வழக்கம். ஆனா இந்த முறை அப்பிடி இல்லாமல் ஒரு கிழமைக்கு முன்னமே ரக்ஸ் எடுத்திட்டன்.




எப்பிடி?

செல் போனுக்கு போன கிழமை ஒரு எஸ்.எம்.எஸ்.

உங்கள் வாகனத்துக்கான வருடாந்த வரியை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் கட்டவும்

எட, என்னில இவ்வளவு அக்கறை எடுத்து ஆர் இந்த எஸ்.எம்.எஸ் ஐ அனுப்பினதெண்டு பாத்தன்.

எங்கட பிரதேச செயலகம் தான். நம்பவே முடியேலை.

ஒரு அரச நிர்வாக அலுவலகம் ஒன்று இப்பிடி நவீன தொழினுட்பங்கள் மூலம் மக்களுக்கான சேவையை விரைவாகவும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்க்கவும் செய்துள்ள இந்த எஸ்.எம்.எஸ் ஞாபகமூட்டல் உண்மையாகவே என்னைப்போன்ற மறதி ஜீவன்களுக்கு ஒரு வரப்பிரசாதம் தான். யாழ்.மாவட்டத்தில் இப்படியான எஸ்.எம்.எஸ் மூலம் வாகனவரி பற்றிய நினைவூட்டலை முற்கூட்டியே அனுப்பும் செயற்பாடு கரவெட்டி பிரதேச செயலகத்தில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இதற்காக குறித்த பிரதேச செயலரும், பணியாளர்களும் பாரட்டப்படவேண்டியவர்களே. இதையே ஏனைய பிரதேச செயலகங்களும் முன்மாதிரியாகக் கொண்டு செயற்படலாமே.

ஆனா இந்த முறை நான் வேளைக்கே ரக்ஸ் எடுத்ததால. ஒரேயொரு கவலை. என்ன்ன நம்பி, சப்போர்ட்' வாங்குறதுக்காக கை நசநசக்க, வாற கிழமை என்னை மறிக்கிற பொலிஸ்காரர் ஏமாறப்போறதை நினைக்க கவலை வரத்தானே செய்யும்.

நல்லதுகளைப் பாரட்டுவோம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங் ஈஸ் ப்ளிங் கலக்கும் போஸ்டர்கள்!

பிரபு தேவா இயக்கத்தில் அக்ஷய் குமார், எமி ஜாக்ஸன் . நடிக்கும் புதிய படம் சிங் ஈஸ் ப்ளிங். ஆக்ஷன் கதைக்களமாக உருவாகி வரும் இந்தப்படத்தின் முதலாவது போஸ்டர்கள் சமீபத்தில் வெளியாகி டுவிற்றர், முகநூல் என வைரஸ்ஸாக பரவி வருகிறது.

ஸ்ருதி ஹாசனைத் தொடர்ந்து எமி ஜாக்ஸனும், விஜய், தனுஷ் , ஹிந்தியில் அக்ஷய் குமார் என மிகவும் தீவிரமாக நடித்து வருகிறார்.



## சந்தானத்துக்குக் கொண்ட

ராஜேஷ் இயக்கத்தில் ஆர்யா நடிக்கும் வாசுவும் சரவணனும் ஒண்ணாப் படிச்சவங்க படத்தை ஒகஸ்ட் 14 ஆம் திகதி வெளியிடுவது என்று சுமார் ஒரு மாதத்துக்கு முன்பே முடிவு செய்துவிட்டார்கள். அதை நோக்கி அவர்கள் சரியாக முன்னேறியும் விட்டார்கள்.

தமிழகம் முழுவதும் பயணம் செய்து ரசி கர்களைச் சந்தித்துப் படத்துக்கு விளம்பரம் செய்தார் ஆர்யா. ஆனால் கடைசிநேரத்தில் பலமுறை தள்ளிப்போன சிம்புவின் வாலுவும் இதே திகதிக்கு வந்து விட்டது. இதனால் ஆர்யாவின் குழுவினருக்கு மனசுக்குள் பெரியவருத்தம்.

திரையரங்குகள் கிடைப்பதிலும் வாலு போட்டிக்கு வந்துவிட்டது. வாலுவைப் பொறுத்தவரை மூன்றா ண்டுகளுக்குப் பிறகு வருகிற சிம்பு படம் என்பதோடு சர்ச்சைகளா லேயே பெரிய விளம்பரத்தைப் பெற்றிருப்பதால் அந்தப்படத்தைப் பார்க்க மக்கள் முன்வருவர்.

இவை எல்லாவற்றையும் தாண்டி சந்தோசமாக இருப்பவர் சந்தானம் மட்டும்தான் என்கிறார்கள்.

இரண்டுபடங்களிலும் அவர் இருக்கிறார். அதனால் எந்தப்படம் முந்தினாலும் அந்தப்படத்தில் அவர் இருப்பார் என்பதால் அவர்தான் அதிகசந்தோசத்தில் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.



## சமந்தாவுக்கு மீண்டும் ஒரு வாய்ப்

விஐபி-2 படத்தின் படப்பிடிப்புகள் யாவும் நிறைவடைந்த நிலை தனுஷ் வெற்றி மாறன் கூட்டணி மீண்டும் இணைந்து ஒரு படம் கொடுக்க உள்ளன. இவர்கள் கூட்டணியில் கிடைத்த வெற்றி நாமறிந்ததே. பொல்லாதவன், ஆடுகளம் என தேசிய விருதுகள கூட அள்ளிக்கொண்டு வந்தனர்.

அடுத்த கட்டமாக தனுஷ் மற்றும் வெற்றி மாறன் இணைந்து தயாரித்த காக்கா முட்டை படத்தின் வெற்றியும் அதற் க் கிடை பாராட்டுகளும் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு தமிழ் சி னிமாவுக்கு கிடைத்த பாராட்டுகள் என்றே கூற வேண்டும்.

இந்தநிலையில் தனுஷ் , வெற்றி மாறன் இணைந்து அடுத்த பட கொடுக்க உள்ளனர். இந்தநிலையில் படத்துக்கு நாயகன் யார் கேள்விக்குப் பதில் கிடைத்துள்ளன. விஐபி-2 படத்தில் சமந்தா நடிப்பும் நட்பும் பிடித்துப் போக இப்போது இந்தப் புதிய படத்தி சமந்தாவையே நடிக்க வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் சமந்தாவுக்கும் தனுஷின் நடிப்பும், நட்பும் பிடித்துப் போய்விட்டதாம்.


## பரிமாற்றப்பட்ட வாழ்த்துக்கள்

சிம்பு, ஹன்சிகா, நடிப்பில் விஜய் சந்தர் இயக்கத்தில் வெளியாக உள்ள படம் வாலு. படத்துக்கு இசை தமன். நீண்ட கால போராட்டத்துக்குப் பிறகு படம் வெளியாக உள்ள நிலையில் ரிக்கெற்றுக்கள் அனைத்தும் வேகமாக விற்பனையாகி வருகின்றன.

படத்தில் சிம்புவின் பெயர் ஷார்ப். ஹன்சிகாவின் பெயர் ப்ரியா மகாலட்சுமி. இந்த படத்தின் படப்பிடுனிஞ்;ஞ்னின் போதுதான் சிம்புவுக்கும், ஹன்சிகாவுக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் காதலிப்பதாக பல விழாக்களில் சொன்னார்கள்.

ஆனால் இருவரும் படம் வருவதற்கு முன்னரே பிரிந்தனர். எனினும் கடந்த 9ஆம் திகதி ஹன்சிகாவின் பிறந்தநாளையொட்டி சிம்பு சரியாக 12 மணிக்கு வாழ்த்துகளை டுவிற்றரில் பகிர்ந்தார்.

இப்போது ஹன்சிகா வாலு படம் வெளியாவதையடுத்து சிம்புவுக்கு வாழ்த்துகளை பரிமாறி உள்ளார். ஒல் த பெஸ்ட் சிம்பு, இந்த படத்துக்காக பல கடினமாக தருணங்கள், தியாகங்கள் செய்தீர்கள். எல்லாவற்றுக்கும் தக்க சன்மானம் கிடைக்கும் நேரம் வந்து விட்டது. ஜொலிக்கும் நேரம் இது என சிம்புவுக்கு வாழ்த்துகளை டுவிற்றரில் வெளியிட்டுள்ளார் ஹன்சிகா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ண்டாட்டம்



## தனுஷ், விஜய் மோதல்!



மாரி படம் விமர்சன அளவில் கலைவையாக பேசப்பட்டாலும் படம் வியாபார அளவில் பிரபலமானது. இந்தநிலையில் மாரி படத்தின் பாடலான தர லோக்கல் பாடல் அனிருத் இசையில் மிகவும் பிரபலமானது. இப்போது இந்த வெற்றி விஜய் படம் வரையில் வந்திருக்கிறது.

மாரி படத்தின் தர லோக்கல் பாடல் போல் விஜய் நடிக்கும் 59வது படத்தின் உலக தர லோக்கல் என்ற வரிகள் கொண்ட பாடல் உள்ளதாம். ஜி.வி.பிரகாஷ் இசையில் இந்த பாடலை விஜய் பாடவிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அட்லீ இயக்கத்தில் விஜய் நடிக்க உள்ள இந்தப்படத்தில் சமந்தாவும், எமி ஜாக்சனும் நடிக்க உள்ளனர். தர லோக்கலைத் தொடர்ந்து அடுத்து உலகத் தர லோக்கல் வருது. மேலும் இதற்கு முன்பு ஜி. வி.பிரகாஷ் இசையில் தலைவா படத்தில் விஜய் பாடிய வாங்கண்ணா வணக்கங்கண்ணா பாடல் பட்டித் தொட்டி எங்கும் ஒலித்தது குறிப்பிடத்தக்கது.

...ய்ப்பு

...க நிலையில்
... படம்
...ற்றி
...ருதுகளைக்

...ந்து
... கி...த
...மிழ் சி
...
...டுத்த படம்
... யார் என்ற
...மந்தாவின்
... படத்திலும்

...ப்பும்,



சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்திருக்கும் பாயும்புலி படம் செப்ரெம்பர் 4 ஆம் திகதி வெளியாக விருக்கிறது. அவர் இப்போது பாண்டிராஜ் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

அந்தப்படத்தைத் தொடர்ந்து, குட்டிப்புலி, கொம்பன் ஆகிய படங்களை இயக்கிய முத்தையா இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார். அந்தப்படத்துக்கு மருது என்று பெயர் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தப்படத்தில் நடிக்கும் நடிகர் நடிகைகள் தேர்வு தற்போது நடை பெற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

படத்தில் நாயகியாக இலட்சுமிமேனனை நடிக்க வைக்கவேண்டும் என்பது இயக்குநரின் விருப்பமாம். அதை விஷாலிடம் சொன்னபோது அவரும் ஒப்புக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இயக்குநர் முத்தையாவின் முதலிரண்டு படங்களிலும் அவர்தான் நாயகி. மூன்றாவது படத்திலும் அவரையே நாயகியாக்க வேண்டும் என்று அவர் விரும்புவது எதனால் என்று தெரியவில்லை. இந்தப்படத்தில் அவர் நடிப்பது உறுதியானால் விஷாலுடன் நடிக்கும் மூன்றாவது படமாகவும் இருக்கும். ஏற்கனவே பாண்டியநாடு மற்றும் நான்சிகப்புமனிதன் ஆகிய படங்களில் விஷாலுடன் நடித்திருக்கிறார்.



## சத்யராஜ் நடிக்க மறுத்தது எதனால்?



தீவிரமான குணச்சித்திர நடிகர் என்றால் அவர் சத்யராஜ் தான். அதிலும் சத்யராஜுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த படங்கள் தான் அதில் அதிகம். நம்மூர் சிவகார்த்திகேயன் முதல் திரையுலக கிங் கான் வரை இவர் தான் மாமனார். பாகுபலி படத்தின் அடுத்த பாகம், ஜாக்ஸன் துரை, நைட் ஷோ, என சத்யராஜ் நடிகர்களுக்கு நிகராக கை நிறைய படங்களுடன் இப்போது வலம் வருகிறார்.

அட்லீ இயக்கத்தில் வெளியான ராஜா ராணி படத்தில் நயன்தாராவின் அப்பா நடிப்பு பலரையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. மிக கவர்ச்சியான, அதே சமயம் யதார்த்தமான நடிப்பால் பலரது பாராட்டுகளையும் அள்ளியவர். அடுத்ததாக கட்டப்பா என்ற ஒற்றை கதாபாத்திரத்தால் ஏன் , எதற்கு , என சினிமா ரசிகர்களின் மண்டையைக் காய விட்டுவிட்டு விட்டார்.

இந்தநிலையில் அட்லீ இயக்கத்தில் விஜய் நடித்துவரும் படத்தில் சத்யராஜ் நடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில் வாய்ப்பை நிராகரித்தார். அதே போல் ரஜினி படத்திலும் நடிக்கவில்லை என உறுதியானது. என்ன காரணம் நெருங்கிய வட்டங்களில் விசாரித்தபோது பாகுபலி படத்துக்காக மட்டும் சுமார் 100 க்கும் மேலான நாள்களை சத்யராஜ் ஒதுக்கியுள்ளாராம்.

மேலும் விஜய் அஜித் படம் என்பதால் கண்டிப்பாக ஈடுபாடுகள் அதிகம் செலுத்த வேண்டிவரும் ஒரே சமயத்தில் அது முடியாது என்பதாலேயே சத்யராஜ் மறுத்ததாக சொல்லப்படுகிறது. எனினும் ரஜினியுடன் இவர் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தால் 80 வருடங்களுக்குப் பிறகு நல்ல காம்பினேஷனில் படம் கிடைத்திரு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதணியை மதிப்பதா? மிதிப்பதா?

- சந்திரகௌரி சிவபாலன்

**பாதணி என்ன கேவலமா? - அதை**
**வெளியே ஒதுக்குவதென்ன தர்மமா?**
**காலணி திருத்தும் மனிதனையும்**
**கேவலமாய் எண்ணல் வேதமா?**
**அர்த்தம் புரிந்தும் புரியாதுலகில்**
**வாழ்கின்றோம்**
**அதன் பயனை மட்டும் பெறுகின்றோம்**
**வேடிக்கை உலகதனில் மனிதன்**
**விளையாட்டுத்தனமாய்**
**வாழுகின்றான்**
**விளக்கம் இன்றிய பண்பாடு**
**பேணுகிறான்**
**சிந்தனை புரியும் மனிதனையும்**
**நிந்தனை செய்துகேலி**
**பண்ணுகிறான்.**

காலணி என்றும், செருப்பு என்றும், சப்பாத்து என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் பாதணி பற்றிப் பேசப்படுவதே இவ்வாக்கம். நமது பாதங்கள் நமது உடலைத் தாங்கி நின்று பாதுகாக்கின்றது. பூச்சி புழுக்கள் நமைத் தீண்டாது தடுக்கின்றது. சேற்றிலே நாம் நடக்க சேற்றைத் தான் பூசி நமது பாதங்களைத் சுத்தமாக வைத்திருக்கின்றது. நோய்க்கிருமிகள் எம்மை வந்தடையாதிருக்க, பாதங்களைப் பாதுகாத்து உடலைப் பேணுகின்றது. இவ்வாறு வெளி அழுக்குகளைத் தானேற்று நமது பாதங்களைச் சுத்தமாகவே வைத்திருக்கும் பாதணியை நமது உடலும் வீட்டின் உள்புறமும் சுத்தமாய் இருக்க வெளியே கழட்டி வைத்துவிட்டு வீட்டினுள் நுழைகின்றோம். இவ்வாறு நமக்காகச் சேவை புரிகின்ற பாதணியைக் கேவலமாகக் கருதும பழக்கம் மனித இனத்திடம் இருக்கின்றது. நமக்குதவுவாரை ஏறெடுத்தும் நோக்காத மனிதர் நம்மோடே பவனி வரும்

நீராட்டுவிழா என்பது ஒரு மதச்சடங்கல்ல. பூப்படைந்த பெண்ணில் பிடித்திருப்பதாகக் கருதும் துடக்கு நீங்க வேண்டும் என்ற கருத்தில் இவ்விழா நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அப்பெண் உண்ட பொருள்கள் எல்லாவற்றையும் ஆரத்தி மூலம் கழித்து விடுவதான சம்பிரதாயம் நம் மத்தியில் இருக்கின்றது. எந்தவிதமான மத சம்பந்தமான சடங்குகளும் இங்கு இல்லை. புதிய புதிய முறைகள் அவரவர் பண வசதிக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நமது பெண் வயதுக்கு வந்துவிட்டாள். ஆண்பிள்ளைகளைப் பெற்றவர்களே, உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள். என்பதை நாள் குறித்து உறவினர் நண்பர்களை அழைத்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுவதே உண்மையான

காட்சியளிப்பார். ஆரத்தி எடுக்கும் பெண்கள் காலணியைக் கழட்டி விட்டே ஆரத்தி எடுக்க வேண்டும். மேடையிலோ எந்தவித கும்பங்களோ வைக்கப்பட்டிருப்பதில்லை. ஆனால், வாசலில் வைக்கப்பட்டிருக்கும் கும்பங்களை பாதணியுடனேயே தரிசித்து திருநீறு குங்குமம் இட்டு வருவார்கள்.

விளக்குக்கு மரியாதை என்றால், விளக்குத் தூக்கி வரும் பெண்பிள்ளைகள் பாதணி அணிந்திருத்தல் என்ன நியாயம். தலையைப் பிய்க்க வேண்டியிருக்கின்றதே. புரியவில்லை, புரிய வில்லை. புரியாமல்த் தானோ எல்லாம் நடைபெறுகின்றது.

மேடையை அலங்கரிப்பவர்கள் பாதணி அணிந்த பாதங்களுடனேயே மேடை அலங்காரங்கள் செய்வார்கள், ஆரத்தி எடுப்பவர்கள் பாதணிகளைக் கழட்டி வருகின்ற போது அலங்காரம் செய்தவர்கள் விட்டுச் செல்லும் அசுத்தங்களை பாதங்களில் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாதணிகள் பாதுகாத்து வந்த பாதங்கள் பழுதடைய இங்கு இடம் அளிக்கப்படுகின்றது. ஏனென்று கேட்டால், அது அப்படித்தான் என்னும் பதிலே விளக்கமாகப்படுகின்றது. காலம் காலமாக வரும் நடைமுறை என்னும் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது போகின்றது. இது வடிவேல் பாசையில் சின்னப் பிள்ளைத்தனமாகவே படுகின்றது. காலம் காலமாக வந்த நடைமுறைகளா இப்போது பூப்புனித நீராட்டு விழாக்களில் நடைபெறுகின்றன?



நிமிர்ந்து நிற்க உதவுகின்றன. அத்தனை தசை நார்களும் பாதங்களில் படிந்திருக்கின்றன. மனிதனின் ஆதார சக்தி பாதங்களில் அமைந்திருக்கின்றது. மனிதனின் இரண்டு பாதங்களும் இரண்டு வைத்தியர்கள் போல் அமைந்திருக்கின்றன. பாதங்கள் இன்றி மனிதன் நிற்க முடியாது, நடக்க முடியாது போகின்றான். இந்தப் பாதங்கள் நோய் நொடியின்றி வாழவும், குளிர் சூட்டிலிருந்து எமது பாதங்களைக் காக்கவும், அசுத்தங்கள் அதை எட்டாமல் பேணவும் பாதுகாப்புக்காக அணிவதே பா....தணி என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். எம்மைப் பாதுகாக்கின்ற பாதணியை மதிப்பதா? மிதிப்பதா?

கொதிக்கும் வெயிலில் நாம் நடக்க வெப்பத்தைத் தானேற்று சூட்டிலிருந்து நம்மைப் பாதணியை மாத்திரம் எங்கே கண்டு கொள்ளப் போகின்றார். பாதணி பாதுகாப்புக் கவசமே தவிர மரியாதையற்ற பொருள் அல்ல என்பது யாவரும் அறிந்த விடயமே. இருந்தும் கோயிலின் வெளியே கழட்டி வைப்பது சுத்தம் கருதியே என்பதைப் புரிந்து கொள்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆலயத்தினுள் பக்தர்கள் நிலத்தில் அமர்ந்திருப்பார்கள். தியானம் செய்வார்கள். அங்கப் பிரதட்சணை செய்வார்கள். இவ்வாறான நடைமுறைகள் நடைபெறும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே பாதணி கோயிலினுள் அணிவதில்லை. கடவுளுக்கு மரியாதை கொடுப்பதற்காக கழட்டுவதாகத் தவறான எண்ணமும் நம் மத்தியில் இருக்கின்றது.

இதைவிடப் பூப்புனித

அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. ஆனால், இங்கு என்ன பாதணி சமாச்சாரம் வருகின்றது என்று எண்ணுகின்றீர்களா?

அழகழகாக அலங்கரிக்கப்பட்ட மண்டபம். அதனுள் அழகழகான பாதணிகள் அணிந்து மண்டபத்தில் பெண்கள் வலம் வருவார்கள். ஆடைகளுக் குக் கொடுக்கும் அவதானத்தை பாதணிகளுக்கும் கொடுப்பார்கள். இம்மண்டபத்தில் விளக்குகள், ஆரத்தித் தட்டு, பூத்தட்டு ஏந்திவரும் பெண்கள் உட்பட அழகுக் காலணியில் வரிசையாக வருவார்கள். விளக்குகளுடன் கூடவே வரும் காலணியை மேடை வந்தவுடன் கழட்டிவிட்டுப் போகும்படி பணிக்கப்படும். ஆனால் பருவமடைந்த பெண்ணோ பாதணியுடனே ஏறிக்

காரியம் ஆற்றுகையில் காரணம் புரிய வேண்டும். காரணம் புரியாது, காரியத்தில் ஈடுபடல் மடைமைத்தனமாய்க் கருதப்படுகின்றது. ஆடை அலங்காரங்கள் அழகல்ல. மனஅறியாமை நீக்கும் அழகே அழகு. தெளிவுபட்ட மனதில் சிந்தனை விரிவுபடும். நான்கு பக்கப் பார்வையில் உலகை அளக்கும் ஆற்றல் புலப்படும். அது அப்படித்தான் எனில் அது எப்படி? என்று அறியும் பக்குவம் பெற்று மனிதன் என்ற நிலைக்கு உயிர் பெற்ற உடல், மாக்கள் என்ற இடத்தில் இருந்து மக்கள் என்ற நிலைக்கு உயரும். காரணம் கேட்பவன் மடையன் என்றால், இவ்வுலகு கல் மண்ணில் இருந்து நாடுகள் என்ற நிலைக்கு மாற்றம் பெற்றிருக்க மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## எச்சரிக்கை

அமைதியோடு இருப்பின்
சாதிக்க முடியுமென
யாரோ உரைத்தார்

தயவு செய்து அமைதி
காத்திடாதீர்
கிடைக்க வேண்டியது
தவறிப்போகும்

கழுகுகளின் இடத்தில்
புறாக்களாய்
மாட்டியபின்பு
அமைதி காத்தல்
சமையல் தான் எஞ்சும்


**வே.வே. அகிலேஸ்வரன்,**
**மருதங்கேணியூர்**

## மௌனத்தை உடைத்து எறிந்துவிடு

எத்தனை முறைதான் ...
என்னை பிடிக்காதத்துபோல் ...
நடித்துகொண்டிருப்பாய் ....
தயவு செய்து மௌனத்தை ...
உடைத்து எறிந்துவிடு ....!!!

ஒன்றை மட்டும் நினைவு ....
படுத்திக்கொள் - உனக்கு ...
காதல் வலியே வராது ....
உன் இதயம் என்னிடம் ...
இருப்பதால் ......!!!

**கே இனியவன்**



## போராட்டம்


நிலம் தோண்டி
குழி பறித்தேன்
தண்ணீர் விட்டு
சீராட்டிப் பார்த்தேன்
விதை போட்டு
முளை விட
காத்திருந்தேன்
முளைக்கும் போது
பலன் அறிந்தேன்
கன்றை கண்ணுக்குள்
வைத்து பாதுகாத்தேன்
மொட்டுக்கள் அரும்ப
கண் மலர்ந்தேன்
பூக்கள் மலர்ந்து
வண்டு அமர ரசித்தேன்
வாசனையை
ரம்மியமாய்
நுகர்ந்தேன்
இது என்ன சுகந்தம் என
களித்தேன்
பூவுக்கு கொடியா
கொடிக்கு பூவா என
மலைத்தேன்
பூக்கள் வாடி கீழே விழ
மனம் கசந்தேன்
மறுபடியும் துளிர் விட்டு
பூவர மனம் இனித்தேன்
வாழ்க்கை போராட்டத்தை
புரிந்து மனம் தெளிந்தேன்

யாரோ

## வேண்டுதல்

நீயாக ...
யாரோ வருவது போல்
ஒரு அரவம்...............
யாரோ பேசுவது போல்
ஒரு சத்தம்..............
யாரோ சிரிப்பது போல்
ஒரு ஒலி....................
திரும்பி பார்க்கிறேன் - நான்
மீண்டும் மீண்டும்............
அது நீயாக
இருக்க வேண்டும் என்று
கடவுளிடம் வேண்டியவாறு

பேயோன்



## வேலைக்காரி

நீ போட்ட கோலத்தை
ஊர் அழிப்பதற்குள்
கைப்பையை மாட்டிக்கொண்டு
வேலைக்குப் போய்விடுகிறாய்
நீ வீடு திரும்பும் வரை
காத்திருக்க வேண்டும் நான்
எனக்கொரு வேலை
கிடைக்கும் வரை.



# நதியாக நடை போட வைக்கும்....

**அருவி**

எம் வாழ்க்கை எப்பொழுதும் சந்தோசமாக இருக்க வேண்டும் என எண்ணும் நாம், அதற்காக செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றும் மிகவும் காத்திரமானவையாகவும் , எதிர்கால இருப்பை தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும் எனவும் எண்ண வேண்டும். ஒரு சிறுவன் அம்மா அடித்ததால் அவனுக்கு அவள் மேல் கோபம். நான் உன்னை வெறுக்கிறேன். நான் உன்னை வெறுக்கிறேன் என கத்தியபடி வீட்டை விட்டு வெளியேறி அருகிலிருந்த பள்ளத்தாக்கை நோக்கி ஓடினான். அதன் பின்பும் அவன் கோபம் தணியவில்லை. பள்ளத்தாக்கில் நின்று கொண்டு நான் உன்னை வெறுக்கிறேன். நான் உன்னை வெறுக்கிறேன் என்று கத்த பள்ளத்தாக்கும் அதை அவன் குரலிலேயே எதிரொலித்தது. முதன்முதலாக எதிரொலியைக் கேட்ட அந்தச் சிறுவன் பயத்தோடு மீண்டும் அம்மாவிடமே ஓடி வந்து பள்ளத்தாக்கில் நான் உன்னை வெறுக்கிறேன். நான் உன்னை வெறுக்கிறேன் என ஒரு பையன் என்னிடம் கத்தினான் என்றான். நடந்தவைகளை ஊகித்த அந்தச் சிறுவனின் அம்மா மீண்டும் பள்ளத் தாக்குக்குச் சென்று நான் உன்னை நேசிக்கிறேன். நான் உன்னை நேசிக்கிறேன் எனக் கத்தும்படி சொல்லி அனுப்பினாள். அவனும் அப்படியே செய்ய பள்ளத்தாக்கும் அதே மாதிரியாகவே எதிரொலித்தது. முன்பு போல் இல்லாமல் பயமற்றவனாக அந்தச் சிறுவன் அம்மாவிடம் வந்து நடந்தவைகளைச் சொன்னான். இந்தச் சம்பவத்தில் வரும் சிறுவனைப் போல நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதையே எந்தவித சமரசமுமின்றி திருப்பித் தரக்கூடியது உங்களின் வாழ்க்கை. வாழ்க்கை மட்டுமல்ல உங்களின் நண்பர்கள், எதிரிகள், உங்களைச் சார்ந்தவர்கள், சாராதவர்கள் மட்டுமன்றி இவர்களைப் போல நீங்கள் அறியாத பலரையும் உள்ளடக்கிய சமுதாயமும் நீங்கள் கொடுப்பதைத்தான் திருப்பித் தர தயாராக இருக்கிறது. இதுவரையிலும் நீங்கள் கடன் கேட்காத ஒருவரிடம் ஒரே ஒருநாள் மட்டும் கடன் வாங்கிப் பாருங்கள். மறுநாளே அவர் உங்களிடம் கடன் வாங்கத் தயாராகி விடுவார். அப்படியாகவே நாம் வாழ்க்கையை வாழப் பழகி விட்டோம்.

பிறரை திறமையாக ஏமாற்றி, வஞ்சித்து உங்களின் வெற்றிகளை அடைவதற்கான முயற்சிகளையோ, செயல்களையோ ஒருபோதும் செய்யாதீர்கள். அப்படி செய்வீர்களேயானால் நீங்கள் எடுத்த அதே வழியை உங்களுக்கு எதிராக மற்றவர்களும் எடுக்கத் தயங்க மாட்டார்கள். பதிலுக்குப் பதில் என்பதைத் தவிர மற்ற அனைத்துமே இரண்டாம் பட்சம் தான் என நினைக்கும் மனநிலை புரையோடிப் போய்விட்ட சமூகத்தில் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நீங்களோ, நானோ, நம்மைச் சுற்றியிருப்பவர்கள் காந்தியோ, புத்தனோ, யேசுபிரானோ அல்ல. சாதாரண மனிதர்கள் தான். சாதாரண நிலையிலிருந்து சாதனை நிலையான வெற்றியை எட்டிப்பிடிக்க முயன்று கொண்டிருப்பவர்களே. அதற்கு மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு அவசியம். அத்தியாவசியம். அப்படியான ஒத்துழைப்பு கிடைக்க வேண்டுமானால் நான் என்ற எண்ணத்தை அகந்தையை விட்டுக் கொடுக்க வேண்டும். நான் என்ற அகந்தையை விடும் போது ஒத்துழைப்பு என்பது உங்களை தானாகவே வந்து சேரும்.

எதிலும் நான் சொல்வதும், நினைப்பதும் தான் சரியாக இருக்கும் என வாதிட்டுக் கொண்டிருக்காதீர்கள். வாழ்க்கையை நேசிக்கவும், நேசிக்கின்ற வாழ்க்கையில் பிறருடைய எதிர்ப்பின்றி வெற்றி பெறவும் வேண்டுமானால் உங்கள் வாழ்க்கையை வாத, பிரதி வாதங்களுக்குள் உட்படுத்திக் கொள்ளாமல் மற்றவர்களிடமிருந்து ஒத்துழைப்பை மட்டும் பெற முயற்சி செய்ய வேண்டும். எந்த அளவுக்கு அதிகமான ஒத்துழைப்புக் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு வாழ்க்கையை சுவரஸ்யமானதாகவும், வெற்றிகரமானதாகவும் அமைத்துக் கொள்ள முடியும்.

ஒத்துழைப்புக் கிடைத்ததால் வெற்றி பெற்ற வரலாற்றைத் தெரிந்து கொண்டதைப் போல ஒத்துழைப்புக் கிடைக்காததால் ஒரு மகத் தான வலிமை கொண்ட படை தோல்விய டைந்த வரலாற்றையும் தெரிந்து கொண்டால் ஒத்துழைப்பின் அவசியமும், அருமையும் உங்களுக்கு புரியும்.

வெற்றியாளனின் தனித்துவம் அவர்களின் செயற்பாடுகளின் சூழ்நிலைகளில் தான் அடையாளமிடப்படுகிறது.

விட்டுக்கொடுத்தால் மட்டும் உதவி கிடைத்து விடுமா? எனக் கேட்கலாம். அதற்கு என் பதில் நிச்சயம் கிடைக்கும். காரணம், விட்டுக் கொடுக்கும் போது தான் நீங்கள் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதோடு அவர்கள் சொல்கின்ற விடயங்களையும், அதன் உண்மைச் சூழ்நிலைகளையும் ஏற்றுக் கொள்ள முடியும். தான் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்ற இந்த மனித இயல்பை செயல்படுத்தி குடும்பங்களில், அலுவலகங்களில், நிர்வாகங்களில் பலரும் வெற்றி பெற்றிருக்கின்றனர். வெற்றி பெற்றும் வருகின்றனர். நான், ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? அவர் விட்டுக் கொடுக்க மாட்டாரா? என சராசரி கேள்விகளை கேட்டுக் கொண்டிருப்பீர்களேயானால் உங்களால் சாதிக்க முடியாது. ஒருநாளும் வெற்றி பெற முடியாது. உங்களின் வெற்றிக்கு, இலக்கு நோக்கிய முன்னேற்றத்துக்கு தான் மற்றவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கி றீர்கள். எனவே முதலில் விட்டுக்கொடுக்க நீங்கள் தயாராகுங்கள். இந்த விடயத்தில் சுயநலவாதியாக இருந்தால் மட்டும் தான் வெற்றி நிச்சயம். உங்களுக்கு எதிரில் நிற்பவர் உங்களுடன் கை குலுக்க கையை நீட்டுவாரா? மாட்டாரா? என்றெல்லாம் யோசித்துக் கொண் டிருப்பதை விட தயங்காமல் உங்கள் கையை நீட்டிப் பாருங்கள். தானாகவே அவருடைய கை உங்களை நோக்கி வரும். அனுபவித்தவர்களின் அனுபவ பாடமான முன் கை யை நீட்டு. முழங்கை தானே நீளும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்.

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்துக்குச் செல்வதற்கான ஆரம்பம் நீங்கள் எடுத்து வைக்கும் முதல் அடியில் தான் இருக் கிறது என்ற சீனப் பொன்மொழியைப் போல உங்களின் வெற்றிக்கான ஆரம்பப் பயணம் விட்டுக் கொடுத்தலில் தான் இருக் கிறது. அதன் மூலம் நீங்கள் பெறும் ஒத்து ழைப்பு உங்களின் வாழ்வின் போக்கையே திசைமாற்றும் என்பதால் விட்டுக் கொடுத் தலை உங்களிடமிருந்து தொடங்குங் கள். பிறரிடம் மாற்றம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கு பதில் உங்களிடம் மாற்றம் செய்ய வேண்டிய அல்லது நீங்கள் மாற வேண்டிய விடயங்கள் ஏதுமிருக்கிறதா? என யோசியுங்கள். அந்த யோசனை உங்கள் வாழ்க்கையை சுவராசியமானதாக, சுகமானதாக மலர வைக்கும். நதியாய் நடை போட வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையில் கலந்த கணிதம்: சதுரங்கம் குவித்த கோதுமை

- இரா.சிவராமன்
பேராசிரியர்

சதுரங்கம் என்றால் நான்கு பிரிவுகள் என அர்த்தம். தரைப் படை, குதிரைப் படை, யானைப் படை, தேர்ப் படை எனும் இராணுவப்பிரிவுகளை அது குறிப்பிடுகிறது. குப்தப் பேரரசு காலத்தில்தான் 'சதுரங்கம்' விளையாட்டு உருவானதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் 'அஷ்டபாதீா' எனவும் 'சதுரங்கா' எனவும் இது அழைக்கப்பட்டது. 'அஷ்டபாதா' என்ற வார்த்தைக்கு எட்டுக்கு எட்டு கட்டங்களைக் கொண்ட சதுரப் பலகை' என அர்த்தம். 'அஷ்டபாதா' எனும் வார்த்தைக்கான அர்த்தத்தை கி. பி. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் தனது 'மகாபாஷ்யா" எனும் புத்தகத்தில் வழங்கியுள்ளார்.

மன்னர்களின் புத்தகம் (The Book of Kings) என்ற நூலில் சதுரங்கம் பற்றிய ஒரு கதை உள்ளது.

கி. பி. 6ஆம் நூற்றாண்டில் ஒரு இந்திய அரசர் சவாலான ஒரு விளையாட்டைக் கண்டுபிடிப்பவருக்குப் பரிசளிப்பதாக அறிவித்தார்.

மன்னர் எதிர்பார்த்த விளையாட்டை, தான் கண்டறிந்துள்ளதாக சிசா இபின் தாகிர் என்பவர் கூறினார். அதன் விதிமுறைகளையும் கூறினார். அதுவே 'சதுரங்கா' விளையாட்டு. சதுரங்க விளையாட்டின் முன்னோடியாக இது கருதப்படுகிறது. சதுரங்காவுக்கும், இன்றைய சதுரங்கம் விளையாட்டுக்கும் சிறிதளவு மாற்றங்களே உள்ளன.

ராஜாவைக் காப்பதற்கு அணிவகுத்து நிற்கும் சிப்பாய் படைகளும், இராணுவத்தின் நால்வகைப் படைகளும் கொண்ட சதுரங்கா விளையாட்டின் விதிமுறைகள் மன்னரை வெகுவாக கவர்ந்தன. போர்ச் சூழலும், தர்க்க சிந்தனையும், விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலும் கொண்ட அற்புத விளையாட்டாக சதுரங்கா அமைந்ததைக் கண்டார் மன்னர். மகிழ்வடைந்தார். சிசாவை பாராட்டினார். பொன்னும் பொருளும் பரிசுகளும் வழங்குவதாகக் கூறினார். சிசா தனக்கு இவை எதுவும் வேண்டாம் என்றார். தான் விரும்புவதைத் தந்தாலே போதும் என்றும் சொன்னார்.

பொன், பொருள், பரிசுப் பொருட்கள் தவிர ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் என்ன தேவைப்படும் என மன்னர் வியந்தார். தான் விரும்புவதையே வழங்குமாறு மீண்டும் பணிவுடன் சிசா கேட்டார். அவரது கோரிக்கையை மன்னர் ஏற்றார். அவரிடம் சிசா கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

சதுரங்கா விளையாட்டில் மொத்தம் 64 சதுரங்கள் உள்ளன. இதில் முதல் சதுரத்தில் ஒரு கோதுமையும், இரண்டாம் சதுரத்தில் இரண்டு கோதுமைகளும், மூன்றாம் சதுரத்தில் நான்கு கோதுமைகளும், நான்காம் சதுரத்தில் எட்டு கோதுமைகளும் என்ற முறையில், ஒவ்வொரு சதுரத்திலும் அதற்கு முன் அமைந்த சதுரத்தில் இருந்த தானியங்களின் அளவைப் போல இரு மடங்கு தானியங்களை வைத்து இறுதிச் சதுரம் வரை நிரப்பி அவ்வாறு வரும் மொத்த கோதுமைகளையும் எனக்கு வழங்குங்கள் என சிசா தனது தேவையைக் கூறினார்.

**சதுரங்கா விளையாட்டில் மொத்தம் 64 சதுரங்கள் உள்ளன. இதில் முதல் சதுரத்தில் ஒரு கோதுமையும், இரண்டாம் சதுரத்தில் இரண்டு கோதுமைகளும், மூன்றாம் சதுரத்தில் நான்கு கோதுமைகளும், நான்காம் சதுரத்தில் எட்டு கோதுமைகளும் என்ற முறையில், ஒவ்வொரு சதுரத்திலும் அதற்கு முன் அமைந்த சதுரத்தில் இருந்த தானியங்களின் அளவைப் போல இரு மடங்கு தானியங்களை வைத்து இறுதிச் சதுரம் வரை நிரப்பி அவ்வாறு வரும் மொத்த கோதுமை களையும் எனக்கு வழங்குங்கள் என சிசா தனது தேவையைக் கூறினார்.**

இவ்வளவுதான் உங்கள் தேவையா? என்ற மன்னர் சிசா கோரிய அளவுக்கு கோதுமை தானியங்களை வழங்குமாறு கட்டளையிட்டார்.

ஒரு வாரம் ஆகியும் சிசா கேட்ட கோதுமைகளை அதிகாரிகளால் வழங்க முடியவில்லை. இதையறிந்த மன்னர் மிகவும் வேதனைப்பட்டார். அரிய விளையாட்டைக் கண்டுபிடித்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்திய அறிஞருக்கு அவரது எளிமையான தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியவில்லையே, ஏன்? என்று அதிகாரியிடம் மன்னர் கேட்டார்.

அதற்கு அந்த அதிகாரி நாம் சிசா கேட்ட கோதுமை தானியங்களின் அளவைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஒப்புக்கொண்டுவிட்டோம். ஆனால், அவர் கேட்ட எண்ணிக்கையிலான கோதுமைகளை நம்மால் கொடுக்கவே முடியாது என்பதுதான் உண்மை என அதிகாரி கூறினார். இதைக் கேட்ட மன்னர் திடுக்கிட்டார். 64 சதுரங்களில் அமையும் கோதுமைகளைக் கூட நம்மால் வழங்க முடியாதா? என்னால் நம்ப முடியவில்லை. என்ன காரணம் என்று தெளிவாகக் கூறுங்கள் என கேட்டார்.

சிசா கேட்டவாறு தானியங்களின் அளவைக் கணக்கிட்டதில் ஒவ்வொரு சதுரத்திலும் 20 = 1, 21 = 2, 22 = 4, 23 = 8, 24 = 16, 25 = 32,.., என்ற வரிசையில் கோதுமைகளின் எண்ணிக்கை அமைய வேண்டும். இதில் காணும் எண்ணிக்கை இரண்டின் தொடர்ச்சிப் படிகளாக உள்ளது. இந்த எண்களைக் கொண்ட வரிசை, கணிதத்தில் பெருக்குத் தொடர் வரிசை (Geometric Progression) எனப்படுகிறது. இந்த கணிதமுறையில் ஒவ்வொரு எண்ணும் முந்தைய எண்ணை விட இரு மடங்கு ஆகிறது. இதனால் எண்ணிக்கையின் அளவு மிக அதிகமாகிக்கொண்டே செல்கிறது. அவ்வாறு கணக்கிட்டதில் 30ஆவது சதுரத்தை அடையும்போதே நம் உணவுப் பொருள் கிடங்கில் உள்ள மொத்த கோதுமையின் அளவைவிட அதிகமாகிவிட்டது. இறுதிச் சதுரத்தில் அமையப் பெற்ற தானியங்களின் அளவு 263 = 92,233,72,03,685,47,75,808 ஆக அமைகிறது. மேலும் சிசா கோரிய மொத்த தானியங்களின் அளவு 1+2+22+23+&+263 = 264 - 1 = 1,84,467,44,07,370,95,51,615 ஆக அமைகிறது. இந்த அளவு எண்ணிக்கையுள்ள கோதுமைகள் நம் பூமியை நிரப்பக்கூடியவை என்றார்.


இதை அறிந்த மன்னர் மலைத்துவிட்டார். சிசாவை அழைத்தார். நீங்கள் கண்டுபிடித்த விளையாட்டை விட நீங்கள் கேட்ட பரிசு மிகச் சிறப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட சிந்தனையை ஒரு தலை சிறந்த மேதையால்தான் வழங்க முடியும். எதை வேண்டுமென்றாலும் பரிசாக வழங்கி விட முடியும் என்ற எனது நம்பிக்கையைத் தகர்த்துவிட்டீர்கள். உங்களைப் போன்ற மேதைகளுக்குப் பரிசோ பொருளோ ஈடாகாது. நீங்கள் என் அரசவையில் பிரதான ஆலோசகராக இருந்து எங்களை வழி நடத்துங்கள் எனக் கூறி அவரை வணங்கினார்.

கணித அறிவால் உயர்ந்த சிசா, மன்னரின் முதன்மை ஆலோசகராக விளங்கி நாடு நலம் பெறப் பேருதவி புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்காளி ஊறுகாய்



### தேவையான பொருட்கள்:

1. நன்கு பழுத்த தக்காளி - 1 கிலோ
2. மிளகாய் வற்றல் - 100கிராம்
3. புளி - 100கிராம்
4. நல்லெண்ணெய் - 100 மிலி
5. கடுகு - 1 தேக்கரண்டி
6. வெந்தயம் - 1 தேக்கரண்டி
7. பெருங்காயம் - சிறிது
8. உப்பு - தேவையான அளவு

### செய்முறை

1. தக்காளியை நன்கு கழுவி ஈரம் போக துடைத்து அல்லது உலர வைத்து நீளவாக்கில் நான்கு துண்டுகளாக வெட்டி, உப்புப் போட்டு 24 மணி நேரம் ஊற வைக்கவும்.
2. மறுநாள் தக்காளிச் சாற்றைத் தனியாக ஒரு பாத்திரத்தில் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். அதை அப்படியே சூரிய வெப்பத்தில் காய வைக்கவும்.
3. எஞ்சிய தக்காளியை ஒரு தட்டில் போட்டு சூரிய வெப்பத்தில் காய வைக்கவும்.
4. இரண்டும் நன்றாகக் காய்ந்ததும், எடுத்து ஒன்றாக்கிக் கொள்ளவும்.
5. அதன் பின்பு, அதில் மிளகாய் வற்றலைக் காம்பு நீக்கிச் சேர்க்கவும். அத்துடன் புளியையும் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.
6. பின்னர் அதை அரைத்துக் கொள்ளவும். (தேவையெனில் சிறிது சுடுநீர் சேர்த்துக் கொள்ளவும்)
7. ஒரு வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், கடுகுப் போட்டு பொரிந்ததும், அரைத்து வைத்திருக்கும் தக்காளி, மிளகாய் விழுதைச் சேர்த்து வதக்கவும்.
8. எண்ணெயும், தக்காளி விழுதும் ஒன்றோடு ஒன்றாகச் சேர்ந்த பின்பு இறக்கி ஆற வைக்கவும்.
9. ஒரு வாணலியில் கடுகு, வெந்தயம், பெருங்காயத்தைப் போட்டு வறுத்து தூளாக்கவும்.
10. தூளாக்கியவற்றை ஆற வைத்த ஊறுகாய்க் கலவையில் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.
11. அதன் பின்னர் அந்த ஊறுகாயைக் குறைந்தது எட்டு மணி நேரம் சூரிய வெப்பத்தில் காய வைத்துக் கொள்ளவும்.
12. அதன் பிறகு, தக்காளி ஊறுகாயை 20 முதல் 30 நாட்கள் வரை கெட்டுப் போகாமல் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

# மகளிர் மட்டும்



பெண்கள்
எல்லாம்
பட்டாம்
பூச்சியைப்
போல்
சுறுசுறுப்பாக
சுற்றித்
திரிகிறார்கள்
ஆண்கள்
கைகள்
சிறைப்
படுத்தும்
வரை

## பெண்

பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்து கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

தேய்பிறையை சந்திக்கும் நிலவல்ல
நிலையாய் விண்ணில் மின்னும்
விண்மீன்கள்! அவர்கள்.

பெண்கள் அடிமைகள் தான்
அதிகாரத்திற்கல்ல
அன்பிற்கு மட்டும்.

பெண்கள் கண்ணாடி அல்ல
ஆனால், நாட்டின் கண்கள்.

பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்த கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

கிருஷ்ணவேணி

# திருமணமான ஆண்களிடம் மயங்கும் பெண்கள்

நமது தமிழ்க் கலாசாரத்தின் படி ஒருவனுக்கு ஒருத்தி என்பதே மரபாகும். இருந்தும் சில பெண்கள் காதலுக்கு கண்ணில்லை என்பது போல திருமணமான ஆண்கள் மீதும் காதல்கொள்கிறார்கள். திருமணமான ஆண்களைக் காதலிக்கும் படித்த, படிக்காத பெண்கள் என எல்லாத் தரப்பிலும் உள்ளனர் என்பது ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.. இதற்குக் காரணம் தன் அப்பாவின் குணாதிசயங்களால் ஈர்க்கப்பட்டு, அவர் மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்ட பெண்கள் பலர் தனக்கு வரப்போகும் கணவனுக்கும் அதே மாதிரிக் குணங்கள் இருக்க வேண்டும் என எதிர் பார்ப்பதுண்டு. இத்தகைய குணாதிசயங்களுடன் ஓர் ஆணைச் சந்திக்கும் பெண் அவனையே தன் வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள நினைக்கிறாள்.

அவனுக்கு ஏற்கனவே நடந்த திருமணம் ஒரு பொருட்டாக இருப்பதில்லை. குழந்தை உள்ளம் கொண்ட பெண்கள் இந்த மாதிரி உறவுகளுக்கு சுலபமாக அடிமையாகி விடுவதுண்டு. அவளது குழந்தைத் தனங்களையும் . தவறுகளையும் சகித்துக் கொள்ள தன்னை விடப் பல வயது மூத்த ஆணை நாடுகிறாள்.

அவன் திருமணமானவனாக இருந்தாலும் கவலைப்படுவதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து பெற்றோரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெறாத பெண்கள் பருவ வயதை அடைந்ததும் அந்த அன்பும், அரவணைப்பும் திருமணமான ஒரு ஆணிடம் கிடைக்கும் போது அவனிடம் தன்னை இழக்கிறாள். உடல் மற்றும் இனக்கவர்ச்சிகளும் இத்தகைய உறவுகளுக்கு ஓர் காரணமாகும்.

திருமணமான ஆணிடம் சாதாரண நட்பாக ஆரம்பிக்கும் இந்தப் பழக்கம் நாளடைவில், காதலாகி, உடலளவில் நெருங்கவும் வாய்ப்புக்கள் அதிகம். விரும்பியதை அடைந்தே தீர வேண்டும் என்றும், அதற்காக எதையும் விலையாகக் கொடுக்கத் தயார் என்றும், நினைக்கும் பெண்களும் இத்தகைய உறவுகளில் திருமணமானவன் என்று தெரிந்த பிறகும் தன் சுயநலம் காரணமாக அவன் குடும்பம் பற்றி பெரிதாக கவலைப்படுவதில்லை.

வேலைக்குச் செல்லும் பெண்களில் சிலர் திருமண்மான ஆண் ஊழியர்களிடம் காதல் வயப்படுவதுண்டு. தன் மனைவியைப் பற்றி சதா குறை கூறிக்கொண்டு புலம்பும் ஆண்களை நம்பி அவர்களை சுலபமாக வலையில் வீழ்த்திவிட முடியும்.

எனவே இவ்வாறான பெண்கள் தம் வாழ்க்கையையும் தொலைத்து இன்னொரு பெண்ணினுடை வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கி யாருமே நிம்மதியாக வாழ முடியாத நிலையை ஏற்படுத்தி விடுவார்கள். இவ்வாறான விடயங்களில் எப்பொழுதும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- த.சதாபிரசன்

# வளர்ந்துவரும் இலத்திரனியல் தொழில்நுட்பமும் நாங்களும்:



"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்தகுடி" என்றெல்லாம் பெருமை பேசியே காலத்தைக் கடத்தினோம். இதனால் கால நீரோட்டத்தில் எதிர்நீச்சல் அடிக்காமல் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்ததோமே அன்றி உருமாறிக் கொண்டு ஒடும் உலகத்துடன் நாங்களும் பங்காளிகளாக மாறாது நேரத்தை வீணடித்தோம்.

மின்சாரம் இருந்தும் அதன் பாவனையை முழுமையாகப் பயன்படுத்தினோமா என்றால் இல்லை. விறகு வெட்டியே உணவு சமைத்தோம். இன்று மின்சாரம் இல்லை என்றால் எம்மால் வாழமுடியாத நிலைக்கு வந்தபின் தான் முன்னர் அதனை முறையாகப் பயன்படுத்தவில்லை என விட்ட தவறுக்காக மனம் வருந்துகிறோம். எமக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அதனால் கிடைக்கும் பயனைச் சிறந்த முறையில் முழுமையாக கையாளத் தெரிந்து வைத்திருத்தல் வாழ்க்கைக்கு அவசியம். இல்லையேல் இருந்தும் உபயோகமற்றதாகிவிடும். ஒரு உபகரணமானாலும் அதைத் தவறாகப் பயன்படுத்துவதனால் தனக்கும், ஏன் மற்றவர்களுக்கும் கெடுதி விளைவிப்பதில் தான் முடியும். ஆனால் இவற்றை மாற்றியமைக்க இன்னும் காலம் கடந்து விடவில்லை.

இன்றைய நவீன உலகில் எமது வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள இலத்திரனியல் இணைய ஊடகங்களை நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் இவற்றின் ஆதிக்கம் எம்வாழ்வில் ஏற்படுத்தி இருக்கும் மாற்றங்கள் எமக்குப் புரியும். வங்கிக்குப்போகாமல் பண மாற்றீடுகளும், தபாற்கந்தோருக்குப் போகாமல் தபால் பரிமாற்றமும், கடைக் குப் போகாமல் உணவு(ப்பொருட்கள்) வீட்டுக்கு வருதலும், அலுவலகத்திற்குப் போகமலேயே வீட்டில் இருந்து கடமையை செய்வதும், விமானச் சீட்டை வீட்டில் இருந்தே கொள்வனவு செய்வதும், இன்னும் எத்தனை. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக கணினியும் இணையமுமே உள்ளன.

இங்கு இணையத்தளங்கள் பற்றிய எமது பார்வையைத் திருப்புவோமானால், சுமார் 50 வருடங்களிற்கு முன்பு இருந்தே இதன் பாவனை குறிப்பிடப்பட்ட அளவில் இருந்து வந்துள்ளது. ஆரம்ப காலங்களில் அரச துப்பறியும் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் உபயோகப்படுத்தப்பட்டு காலப்போக்கில் அலுவலகங்களிலும் பின்னர் சாதாரண மக்களிடையேயும் பாவனைக்கு வந்தது. கடந்த 17 வருட காலத்தில் அபார வளர்ச்சி கண்ட இலத்திரனியல் ஊடகங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாகவே அமைந்து விட்டன. ஆரம்ப காலங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே உபயோகப்படுத்தும் உபகரணமாக பார்க்கப்பட்ட கணினி இன்று எமது இல்லங்களில் சாதாரண பாவனைப் பொருளாக மாறிவிட்டது. ஆனால், அதன் உபயோகம் இன்னும் பரந்த அளவில் பயன்படுத்தப் படுகின் றதா என்பதும், இதன் பாவனை எம்மவர் மத்தியில் எவ்வாறு வேர் ஊன்றி உள்ளது என்பதும் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொலைபேசியை எடுத்துக் கொண்டால் வயது வித்தியாசம் இன்றி எல்லோரும் உபயோகப் படுத்துகின் றோம். தொலைக்காட்சியை எல்லோரும் பார்க்கின்றோம். அதேபோல பத்திரிகை களையும் எல்லோரும் வாசிக்கின்றோம். இதை எல்லாம் ஒருங்கே தன்னகத்தே கொண்ட கணினியை அல்லது இணை யத்தை உபயோகிக்க அல்லது கற்றுக் கொள்ளப் பின்னிற்பது கவலைக்குரிய ஒன்றாகும். இது சிறுவர்களுக்கோ அல்லது மாணவர்களுக்கோ என உருவாக்கப்பட்டதோ ஒன்றல்ல.

கற்பதற்கோ வயது, காலம், நேரம் என்று ஒன்றும் வரையறை கிடையாது. யார் வேண்டுமானாலும் எதையும் எப்போதும் கற்றுக் கொள்ள முடியும். ஆர்வம் ஒன்றே தேவை. இதற்கு உதாரணமாகச் சில நாட்களுக்கு முன் கணினிக் கல்வியை கற்பிக்க ஆசிரியர் தேவை என்ற விளம்பரம் ஒன்று வந்திருந்தது. மாணவர்கள் யார் என வாசித்த போது சிறு அதிர்ச்சியும் காத்திருந்தது. 80முதல்90வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனப்போடப்பட்டிருந் தது. அங்கு அவர்களின் வயதைவிட ஆர்வமே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். அது பாரட்டப்பட வேண்டியதுமாகும்.

இந்த இடத்தில் இன்னுமொரு சம் பவம் ஞாபகம் வருகின்றது. சில நாட் களுக்கு முன்பு நீண்ட நாட்களாக (சுமார் 10 ஆண்டுகள்) தொடர்பு இன்றியிருந்த நண்பர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. உரை யாடிமுடிந்ததும் அவருடைய ஈ மெயில் முகவரியை பெற்று அதனுடாக தொடர்பு கொள்ள முயன்றேன். அதற்க்கு அவர் அளித்தபதில் எனக்கு ஈ மெயிலைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பதுதான். அவரை கணனியின் முன் அமர்ந்து முயற்ச்சி செய்யும்படியும்; அதற்கான சில எளிய வழிமுறைகளையும் கூறி தொடர்பை துண்டித்தேன். என்ன அதிசயம் அடுத்த ஒருகிழமையில் அவர் இன்டநெற்றில் facc book வழியாக தொடர்பு கொண்டார். இங்கு எம்மவரின் முயற்சி இன்மையையே சுட்டி காட்ட விரும்புகின்றேன்.

எம்மவர் மத்தியில் கணினியின் பாவனை வளர்சி அடைந்து வருவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஆனால் இன்னும் பெருகவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. இவ் இணையத் தளத்திலேயே தற்போது எமது ஊர் பெரியவர்களின் தன்னார்வ முயற்சி களான வரலாற்றுக்கட்டுரைகள், ஆய்வு கள் போன்ற ஆக்கங்கள் இடம்பெறுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனையே ஏனையவர்களும் தொடர வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும். பிரிந்தவர் இணையவும், வாழ்நாளிலே காணதவர் உறவு பாராட்டவும், தெரிந்தவர் நட்பைப் பேணவும் இவ் இணையத்தளம் பாலம் அமைப்பது போல, மேலும் எங்கள் கிராமத்தின் தொன்மியங்களை எடுத்து ரைக்க பெரியோர் வரவு அவசியமானது ஆகும். பலர் இங்கு இணைந்தால் தான் பயன் பெரிதாகும். ஊர் ஒன்று கூடினால் தான் தேர் இழுக்கலாம்.

எங்கும் எதிலும் நன்மையும் தீமை யும் இருக்கவே செய்யும். அசுர வளர்சி அடைந்து வரும் இலத்திரனியல் ஊடக வாழ்வில் எவ்வளவு எமக்கு பயன் இருக் கிறதோ அதே போல அதன் தவறான உபயோகத்தால் பல தீமைகளும் நிகழ்வதை நாம் நாளாந்த வாழ்வில் காண்கின்றோம். எதையும் எமக்கு நன்மை தரக்கூடிய வகையில் உபயோகிப்பதன் மூலம் எமது வாழ்வை வளமாக்கிக் கொள்வோமாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலத்தைப் பாதுகாக்கும் செப்புப் பாத்திரங்கள்



தமிழர்கள் பண்டைய காலத்தில் இலக்கியமும் வாழ்வியலும் மட்டுமின்றி அறிவியலிலும் சிறந்து விளங்கியிருக்க வேண்டும். இப்படி தான் சமைக்க வேண்டும் என்பதில் இருந்து அந்த உணவை எந்த வகையிலான பாத்திரங்களில் சமைக்க வேண்டும் எவ்வாறு சாப்பிட வேண்டும் என அனைத்தையும் ஆரோக்கியத்திற்கு ஏற்றவாறு அமைத்திருக்கின்றனர்.

தயவு செய்து 'பிளாஸ்டிக்' போத்தலில் தண்ணி குடிக்காதீங்க நாம் இன்று தண்ணீர் பருகப் பயன்டுத்தி வரும் 'பிளாஸ்டிக்' உபகரணங்கள் 100% உங்கள் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பவை. முக்கியமாக ஆண்களுக்கு ஆண்மையை பாதிக்கும் தன்மை உடையவை. நாண் ஸ்டிக் பாத்திரத்தில் சமைத்து சாப்பிடுவதால் உடலுக்கு ஏற்படும் ஆபத்துகள். நமது முன்னோர்கள் பயன்படுத்திய செப்புப் பாத்திரங்கள் இதற்கு நேர் எதிராக 100% ஆரோக்கிய நன்மைகளை தருபவையாக இருக்கின்றன.

### கிருமிகளைக் கொல்லும் செப்புப் பாத்திரங்கள்

பாக்டீரியாக்களைக் கொல்லும் செப்புப் பாத்திரங்களில் தண்ணீர் ஊற்றி வைத்து பருகுவதால் நீரில் இருக்கும் கிருமிகள் கொல்லப்படுகின்றன. முக்கியமாக வயிற்று உபாதைகள் மற்றும் வயிறு சார்ந்தப் பிரச்சனைகளை ஏற்படுத்தும் கிருமிகளை முற்றிலுமாக அழிக்கப் பயன்படுகிறது செப்புப் பாத்திரங்கள். தைராய்டு சுரப்பிகளை கட்டுப்படுத்த சீரான முறையில் செயல் இயக்கம் நடைப்பெற வெகுவாக உதவுகிறது செப்புப் பாத்திரங்கள். செப்பு பாத்திரங்களில் தண்ணீர் குடிப்பதனால் உங்கள் உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது. செப்புப் பாத்திரங்களில் தண்ணீர் பருகுவதனால் மூட்டு வலியை குறைக்க குணமடைய செய்ய முடியும். காயங்கள் விரைவில் குணமடைய செப்பு உங்கள் உடலில் செல்கள் புதிதாக வளரவும் ஆரோக்கியமாக இருக்கவும் வழிவகுக்கிறது. உங்களுக்கு ஏதேனும் காயங்கள் ஏற்பட்டாலும் அது விரைவாக குணமடைய செப்பு உதவுகிறது.

மூளையில் நியூரான்களுக்கு மத்தியில் இருக்கும் இடைவெளியை மையிலின் என்னும் உறை மூடிப் பாதுகாக்கிறது. இந்த மையிலின் உறைகளைப் பாதுகாக்க செப்பு உதவுகிறது. செப்புப் பாத்திரங்களில் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். செரிமானம் செப்புப் பாத்திரங்களில் நீரைப் பருகுவதனால் செரிமானப் பிரச்சனைகளில் இருந்து நல்ல தீர்வு காண இயலும்.

இரத்த சோகை சிகப்பு இரத்த அணுக்கள் உடலில் பெருமளவில் உற்பத்தி செய்ய செப்பு நீர் பயன்படுகிறது. செப்புப் பாத்திரங்களில் நீர் பருகுவதனால் இரத்த சோகை கோளாறுக்கு சீரான தீர்வு காண முடியும். புற்றுநோயை உண்டாக்கும் கிருமிகளை உடலில் அண்டவிடாமல் தவிர்க்க செப்புப் பாத்திரங்களில் பயன்படுத்தப் படும் நீர் உதவுகிறது. மற்றும் இது புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைக் குறைக்கிறது. முதிர்ச்சி செப்பில் இருக்கும் 'அன்டி - அக்ஸிடன்ட்ஸ்' உங்கள் சருமத்தை பாதுகாக்கிறது. உங்கள் சருமத்தின் முதிர்ச்சி அடையும் தன்மையைக் குறைத்து உங்களை என்றும் இளமையாக வைத்துக் கொள்ள இது பயனளிக்கிறது.

---

## உயிரைப் பறித்த...

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளை மேலும் துன்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

அனுமதி அட்டை விடயத்தில் பாடசாலை நடந்து கொண்ட விதம் சரியானாதா என்ற வினா எல்லோர் மனதிலும் எழுகின்றது.

கல்விப் பொதுசாதர தரப் பரீட்சையில் கணித பாடத்தை சித்தியடையாத பல மாணவர்கள் உயர்தரம் கற்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் அவர்கள் அடுத்த வருடம் இடம்பெறும் பரீட்சையில் தோற்றி கணித பாட பெறுபேற்றை பெற்றுக் கொடுக்க வேண்டும். இது கடந்த கால வரலாறு.

அவ்வாறு செய்யாது விடின் அம் மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்படுவர். இது சாதாரணமாக நடைமுறையில் உள்ள விடயம்.

ஆனால் திவ்வியா பரீட்சை எழுதி கணித பாட பெறுபேறு வராத சந்தர்ப்பத்திலும் பாடசாலை தொடர்ந்து கற்க அனுமதி வழங்கியது மனித நேயமாக இருந்தாலும் அது அந்த பாடசாலை அதிபர் விட்ட தவறே.

உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பிய போது கணித பாடம் இல்லை என்பதால் விண்ணப்பத்தை அனுப்பாது குறித்த மாணவிக்கு ஆலோசனை வழங்கி அடுத்த வருடம் நடைபெறுவிருக்கும் பரீட்சைக்கு தோற்ற வைத்திருக்க முடியும்.

ஆனால் அவ்வாறு செய்யாது விண்ணபித்து அனுமதி அட்டை வந்ததும் அதனை வழங்காது விட்டது அதிபரின் தவறே? அந்த தவறான முடிவே இன்று திவ்வியாவின் இழப்புக்கு காரணமாகியுள்ளது.

கணிதபாடம் இல்லாது உயர்தரப் பரீட்சை எழுத முடியும். ஆனால் அந்த மாணவி பல்கலைக்கழக அனுமதியை பெறமுடியாது. அதை தெளிவுபடுத்தி பாடசாலை அனுமதி அட்டையை வழங்கியிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் கணிதத் துறையுடன் சம்மந்தப்படாத துறைகளை கணிதம் இல்லாது கற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திவ்வியா மட்டுமல்ல இன்று பல பாடசாலைகளில் இவ்வாறான நிலை இருக்கிறது. கணித பாடம் இல்லாத பலர் உயர்தரம் கற்க அனுமதிக்கப்படுவதும் அதன் பின்னர் அவர்கள் கணித பாட பரீட்சையில் தேற்றி சித்தியடையாத சந்தர்பத்தில் தொடர்ந்தும் கல்வி கற்க அனுமதிப்பது, பாடசாலையில் ஏதாவது குழப்பங்கள் ஏற்படுகின்ற போது அல்லது தமக்கு விரும்பிய நேரத்தில் அவர்களை இடைநிறுத்துவது என தொடர்கிறது இப் பிரச்சினை.

குறிப்பாக வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியில் கடந்த மாதம் கூட 12 மாணவர்கள் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டனர். தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர்கள் இடைநிறுத்தப்பட்டமையால் மாணவர்கள், பெற்றோர்கள் குழப்பம் அடைந்தனர்.

இப் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். இன்னும் பல திவ்வியாக்களை இந்த மாணவர் சமூகம் இழக்க முடியாது.

எனவே, கணித பாடம் இல்லாது உயர்தரம் கற்கும் மாணவர்கள் தொடர்பாக கல்வி அமைச்சு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அதன் மூலமே பல மாணவர்களின் எதிர்காலத்தை காப்பாற்ற முடியும் எனபதே உண்மை.

---

## சீனாவில் உள்ள...

( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் பல சீனாவில் செய்த பொருட்களைப் பாவித்தாலும் எந்த ஒரு சீன வணிகப் பெயரோ சின்னமோ எம்மனதில் இல்லை. இதற்குக் காரணம் சீனாவில் கண்டுபிடிப்புக்கள் பெரிய அளவில் இல்லை. சீனா தனது கண்டுபிடிப்புக்களை ஊக்கவிப்பது மிகவும் அவசியம் என சீன ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளனர்.

### சீனாவின் மக்கள் தொகைக் கட்டமைப்புப் பிரச்சனை

சீனாவின் பிரச்சனைகளுக்குள் பெரும் பிரச்சனையாக இருப்பது அதன் மக்கள் தொகைக் கட்டமைப்பு. அங்கு வேலை செய்யும் மக்கள் தொகைக்கும் வயோதிபர்களின் மக்கள் தொகைக்கும் இடையிலான விகிதாசாரம் மோசமடைந்து கொண்டு போகின்றது. வேலைசெய்வோரின் தொகையுடன் ஒப்பிடுகையில் வேலை செய்ய முடியாத வயோதிபர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு போகின்றது. இதை ஈடு செய்ய அங்கு உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். ஆனால் சீன உற்பத்தித் திறனும் குறைந்து கொண்டே போகின்றது.


எதையும் 'பிளான்' பண்ணிச் செய்யும் சீனர்களால் முடியும்

சீனாவில் வருமான வரி செலுத்துவோரின் தொகை சீன மக்கள் தொகையில் 2 விழுக்காட்டிலும் குறைவானவர்களே. இது சீன பொருளாதாரம் மந்த நிலையை அடையும் போது அரச நிதி நிலைமையில் ஒரு மோசமான நிலையைத் தோற்றுவிக்கலாம். தற்போது 7 விழுக்காடு வளர்ந்து கொண்டிருக்கும் சீனப் பொருளாதாரம் 2017ஆம் ஆண்டு 4 விழுக்காடு மட்டுமே வளரும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தப் பின்னணியில் சீனாவில் அரச நிதி நிலையில் பாரிய சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் வரவிருக்கும் ஆபத்தை முன் கூட்டியே அறிந்து அதற்கு ஏற்பத் திட்டமிட்டு அத்திட்டத்தை துல்லியமாக நிறைவேற்றும் திறமையும் அனுபவும் சீனர்களிடம் நிறைய உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம்



## அறிவுரை கேட்போம்

+ :- நல்லவற்றைக் கூட்டிக் கொள்.

- :- தீயவற்றைக் கழித்துக் கொள்.

×:- அறிவைப் பெருக்கிக் கொள்.

/ :- நேரத்தை வகுத்துக் கொள்.

= :- இன்ப துன்பங்களை சமமாகக் கருது.

<:- செலவைக் குறை, ஆணவத்தைக் குறை.

> :- அன்பைப் பெருக்கி ஆணவத்தைக் குறை.

= :- நல்லவர்களுக்கு இணையாக இரு.

± :- பிறரை நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது.

+++:-வளர்பிறை போல் அறிவில் வளரு.




இந்த இரு படங்களுக்கு இடையேஉள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.




## இருபது ஆண்டுகள் கஷ்டம்...?

ஒரு வெளிநாட்டுத் துறவி இருபது ஆண்டுகள் கடினப்பயிற்சி எடுத்து நீரின் மீது நடந்து செல்லும் சக்தியான ஹடயோகத்தைக் கற்றுக் கொண்டார். அவரால் தரையில் நடப்பது போல சர்வ சாதார ணமாக தண்ணீரில் நடக்க முடிந்தது. அவர் ஒரு முறை இந்தியாவுக்கு வந்தார்.

இந்தியாவில் ராமகிருஷ்ண பரமஹம்சரின் பெரு மைகளைப் பற்றி கேள்விப்பட்டு அவரைச் சந்தித்தார்.

அந்தத் துறவி ராமகிருஷ்ணரிடம், நான் இருபது ஆண்டுகள் கஷ்டப்பட்டுத் தண்ணீரில் நடக்கும் ஹடயோகத்தைக் கற்றுக் கொண்டேன். இந்த சக்தியால் இந்தியாவின் பெரிய நதியான கங்கை நதி மீது கூட நான் எளிதில் நடந்து போய் அக்கரையை அடைந்து விடுவேன் என்றார்.இதைக் கேட்ட ராமகிருஷ்ணர், படகோட்டியிடம் சிறிது பணம் கொடுத்தால் உங்களை கங்கையின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்குக் கொண்டு சென்று விட்டு விடப்போகிறார். இதற்காக இருபது ஆண்டுகளை வீணடித்து விட்டீர்களே... என்றார்.

இதைக் கேட்ட அந்தத்துறவி வெட்கித் தலை குனிந்தார்.

## விலங்கு என்று விரட்டலாமா?

விலங்கு என்று விரட்டாதே
வீண்பழி அதன் மேல் சுமத்தாதே
தேனைச் சேர்ப்பது தேனீ யாகும்
தேனைச் சிதைப்பது நீயாகும்

இறைச்சி உண்பதில்லை ஆடு
இறைச்சியாய் உனக்கு ஆடு
நீயும் மானும் ஓடிப்பார்
நிச்சயம் நீ தோற்பாய்

கொடியது பாம்பு என்றாலும்
கடிக்காது நீ அதைச் சீண்டாமல்
பாலைவனக் கப்பல் ஒட்டகமே
பாதை கடப்பது அதன் இனமே

நீரை விடுத்துப் பாலை அருந்தும்
நிறைந்த மதியுடைய அன்னம்
நினைத்ததை உன்னால் மறப்பதாலே
நீ அல்ல நிறைமதி அன்னம்

எறும்பின் வேகத்தை உற்றுப்பாரது
எதிர்காலம் சேமிக்கும் குணத்தைப்பார்
சினைமாடு என்று தெரிந்துவிட்டால்
காளைமாடு சற்றே ஒதுங்கிவிடும்

**இரா. இரவி, மதுரை**

## மயில்

இந்தியாவின் தேசியப்பறவை மயில். மயில், பசியானிடே குடும்பத்தின், பேவோ இனத்தைச் சேர்ந்தது. மயில், ஆண்மயிலின் ஆடம்பரமான தோகைக்காகப் பெயர்பெற்றது. ஆண்மயில் பெண்ணைக் கவர்வதற்காக தோகையை விரித்து ஆடும். ஆண் மயில்கள் அழகிய, பளபளப்பான நீலம் கலந்த பச்சை நிறமுடையவை. தோகையில் வரிசையாக சுமார் 200 கண் வடிவங்கள் உள்ளன. தோகையை விரிக்கும்போது இவை மிகவும் அழகாகத் தோற்றமளிக்கின்றன.

இவற்றின் குரல் கரடு முரடாக, கேட்க இனிமையற்றதாக இருக்கும்.

பெண் மயில்களின் உடல் மங்கலான பச்சையும், பளபளப்பும் கொண்ட நீலமும், பச்சை கலந்த சாம்பல் நிறமும் கலந்தது. நீண்டதோகை பெண் மயில்களுக்குக் கிடையாது. நீண்டதூரம் பறக்க இயலாத மயில்கள் உயரமான மரங்கள் போன்றவற்றில் ஏறி அமர்ந்துக் கொள்ளும்.





## சிறுவர் ஆக்கங்கள்



இ.பிரதீபன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம்-35

இது மாணவர்களுக்கான போராட்டம் எனும் பட்சத்தில் அதற்கான பிரச்சாரத்தை செய்தாக வேண்டும் என்று அவர் விரும்பினார். ஏன் போராடுகிறோம்? யாரை எதிர்த்து? போராட்டத்தின் முடிவில் எதை சாதிக்க விரும்புகிறோம்? என்பன வற்றை தெளிவாக எழுதியும் பேசியும் போராட்டம் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பினால் தான் எடுத்துக் கொண்ட காரியம் வெற்றியடையும் என்பது காஸ்ட்ரோவின் நம்பிக்கை. அதனால் தான் இத்தனை ஏற்பாடுகளும், தகுந்த ஆயத்தங்களைச் செய்து கொண்டு, தக்க முறையில் அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் வெற்றி நிச்சயம் என்று அவர் நம்பினார். காஸ்ட்ரோவின் நம்பிக்கை பொய்க்கவில்லை. பேரூந்துக் கட்டண உயர்வு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

காஸ்ட்ரோ உற்சாகமானார். அவரை மேலும் உற்சாகப்படுத்தும் விதமாக 1949ஆம் வருடம் காஸ்ட்ரோவுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் ஃபிடல் பிளார்ட். பின்னர் இவனது பெயர் பிடலிட்டோவாக மாறிப் போனது.

செம்ரெம்பர் முப்பது குழு எனும் பெயரில் ஒரு மாணவர் குழு தொடங்கப்பட்ட போது காஸ்ட்ரோ அதில் இணைந்து கொண்டார். இந்தக் குழுவில் கம்யூனிஸ்ட் மாணவர்கள் தான் தலைவர்கள். காஸ்ட்ரோவை இணைத்துக் கொள்வதற்கு முன்னால் அவர்கள் ஒரு நிபந்தனையை விதித்தார்கள். காஸ்ட்ரோ கூட்டங்களுக்கு வரும் போது துப்பாக்கியை கொண்டு வரக் கூடாது என்பது தான். காஸ்ட்ரோ ஒப்புக் கொண்டார். அந்தக் குழு காஸ்ரோவை பிரசாரம் செய்வதற்காக பயன்படுத்திக் கொண்டது. அவரும் உற்சாகமாகக் கூட்டங்களைக் கூட்டி, மக்களைச் சந்தித்து தனது வாதத்திறமையால் அவர்களைக் கட்டிப் போட்டார். இவர் பேசி முடிக்கும் வரை மக்கள் கலையாமல் கவனமாக உள்வாங்கிக் கொண்டதைக் கண்ட மாணவர்கள் ஆச்சரியமடைந்தனர். உற்சாகமான கைதட்டல்களும் ஏராளமாகக் கிடைத்தன. முன்பு சிநேகமாக இருந்த மாஃபியா கும்பல் மீண்டும் காஸ்ட்ரோவுக்கு எதிராகத் திரும்பியது. மீண்டும் காஸ்ட்ரோ குறி வைக்கப்பட்டார். மாஃபியாவிடமிருந்து இவரைக் காப்பாற்றுவதே பெரும் வேலையாக மாறிப் போனது. காஸ்ட்ரோ எங்கு சென்றாலும் அவரைச் சுற்றி நண்பர்கள் அரண்போல் சூழ்ந்து கொண்டனர். நிலைமை தீவிரமடைந்து ஒரு சில மாதங்கள் காஸ்ட்ரோ தலைமறைவாக வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேறெங்காவது தங்கினால் கண்டு பிடித்து விடுவார்கள் என்பதால் ஆர்தோடாக்ஸ் கட்சியின் தலைவர் லெஸ்னிக் என்பவரது வீட்டில் தங்கினார் காஸ்ட்ரோ.



(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 686

**மேலிருந்து கீழ்**

1 - ஐந்தாம் திதி.
2 - சைவர்களின் தோத்திரப்பாடல்.
3 - கோபம்.
4 - நிகழ்வு.
5 - ஒரு மீன் வகை.
8 - பாடசாலையின் ஓர் அலகு.
10 - ஒரு கிரகம்.
12 - பெறுபேறு.
13 - உணர்வைக் கடத்துவது.
14 - பிடித்தால் பிடியை விடாத மிருகம்.
15 - தவறு.
16 - மனைவி.
17 - பன்மைச்சொல்.
19 - தந்தம்.

**இடமிருந்து வலம்**

1 - நாடின்றி அலைபவன்.
4 - திடீரென.
6 - குரங்கு.
7 - நாவிதஸின் தொழிலில் ஒன்று.
9 - ஒரு கீரை வகை.
11 - அதிகமாகும்.
12 - ஊர்வலம்.
13 - சுகம்.
15 - மனைவியை இழந்தவன்.
17 - (கட்டிலில்) கிட.
18 - ஓர் குடி வகை.
19 - வலிமை.
20 - அரற்றுதல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| 20 | | | | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:------------------------------------------------

---------------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

வ. ஆ. அதிரூபசிங்கம், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

வி. சுகந்தி, மே/பா.வே. இராசநாயகம், சோறன்பற்று, பளை.

திருமதி செ. பூமணி, இல6/5.புவனேஸ்வரி அம்மன் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

வே. சரஸ்வதி, அம்மன், குடத்தனை.

க. தில்லையம்பலம், கதிர்காம கோவலடி, வதிரி, கரவெட்டி.

## சொ. சி. போட்டி இல 686

■ சொற்சிலம்பம் போட்டி 686ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 02 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, செப்ரெம்பர் 09 மற்றும் செப்ரெம்பர் 16ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 683இல் பரிசு பெற்றோர்

1. க. கமலேஸ்வரன், இல 791, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
2. வி. விஷ்ணுஜன், சிவகுரு வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
3. செ. சின்னத்துரை, இல 131 - D /10, உருத்திரபுரம்.

### சொற்சிலம்பப் போட்டி 684இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. அப்பாவி.
2. தாவரம்.
3. திடம்.
4. வெகுமானம்.
5. மையம்.
8. சுதந்திரம்.
10. தம்பட்டம்.
12. காலம்.
13. அரபு.
14. அகதி.
15. காப்பு.
17. கல.

**இடமிருந்து வலம்**

1. அந்தாதி.
4. வெண்மை.
6. வடக்கு.
7. பாசுரம்.
9. மாதம்.
11. விதம்.
12. கானம்.
13. அலம்பல்.
14. அதிகாரம்.
16. கரப்பு.
17. கடல்.
18. திம்பு.
19. பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

19.08.2015 –25.08.2015

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

மனக் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். தடை விலகி முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போடுவீர்கள். வாகனப் பயணத்தில் விழிப்புணர்வு தேவை. புத்திரர்களின் செயல்பாடு பெருமை அளிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும். மனைவி வழியில் ஆதாயம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள். பணியாளர்கள், பணி இலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தை கடைபிடிப்பர். மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்குவர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

முருகனின் அருள் பலம் துணை நிற்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். உறவினருடன் இணக்கம் உண்டாகும். புத்திரரை கண்டித்து, அவர்களின் குறைகளை சரி செய்வீர்கள். உடல்நிலை திருப்தியளிக்கும். மனைவியின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவர். மாணவர்கள், திட்டமிட்டு படிப்பர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள் சமூக அந்தஸ்து உயரும். சேமிப்பு, அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும். தாய் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திரரின் வளர்ச்சிக்குத் துணை புரிவீர்கள். எதிரியின் கெடுசெயல் பலமிழக்கும். மனைவியின் செயல்பாட்டால், குடும்ப வளர்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வருமானம் புதிய வழியில் கிடைக்கும். இயன்ற உதவியை பிறருக்குச் செய்ய முயல்வீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர்களுக்கு அறிவுரை கூறி, அவர்களின் குறைகளை சரிசெய்வீர்கள். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து, வருமானம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரர்களின் எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். சத்தான உணவும், சீரான ஓய்வும் உடல்நலனை பாதுகாக்கும். மனைவி கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபார ரீதியான வெளியூர் பயணம் வெற்றி பெறும். வருமானம் கூடும். பணியாளர்கள், சுதந்திர உணர்வுடன் பணிபுரிவர். பெண்கள், விரும்பிய ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

தாயின் தேவையை நிறைவேற்றி, அவரின் ஆசி பெறுவீர்கள். புத்திரர்கள், பிடிவாத குணத்துடன் செயல்படுவர். உடல்நிலை அதிருப்தியளிக்கலாம்; கவனம். மனைவியால் ஆடம்பரச் செலவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாணவர்கள், ஆசிரியர் மத்தியில் நற்பெயர் காண்பர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். புதிய வாகனம், வீடு வாங்க யோகமுண்டு. புத்திரர் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் அடைவர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். மனைவியின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு, லாபம் காண்பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரரின் எதிர்கால வாழ்வுக்கு உறுதுணை புரிவீர்கள். மறைமுக எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு கூடும். மனைவியின் அன்புக்கு உரியவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி நிமித்தமாக வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள், சிக்கனத்தைப் பின்பற்றி சேமிக்க முயல்வர். மாணவர்கள், கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

மற்றவரின் எண்ணத்தை உணர்ந்து செயல்படுவீர்கள். சிரமம் அணுகாத வாழ்வு உருவாகும். புத்திரரின் குறையை, நிதானமுடன் பேசி சரிசெய்வீர்கள். உறவினர் வருகையால், குடும்ப செலவு கூடும். இல்லறத் துணை, கூடுதல் அன்பு, பாசம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள், பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**மகரம்**

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தாய்வழி உறவினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திரரின் முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வீர்கள். உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். குடும்பம், முன்னேற்ற பாதையில் வெற்றிநடை போடும். உறவினர் கேட்ட உதவியை செய்து மகிழ்வீர்கள். புத்திரர்களுக்கு தக்க அறிவுரை கூறி, நல்வழிப்படுத்துவீர்கள். நண்பர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். திடீர் வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**மீனம்**


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் செலுத்தவும். புத்திரரின் எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்; கவனம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கப் பெறுவீர்கள். பணியாளர்கள், சுறுசுறுப்புடன் பணியாற்றி, பணிகளை விரைந்து முடிப்பர். பெண்கள், விலைமதிப்புள்ள பொருட்களை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 99



யாழ்ப்பாணத்தில் முற்றுகைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு, மனிதாபிமான உதவிகளுடன் 1987 ஜூன் 02ஆம் திகதியன்று ஒரு கூட்டம் படகுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. பொருளாதாரத் தடையாலும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளாலும் மக்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்ணுக்கு நிவாரணம் வழங்கி அவர்களைத் தக்க வைப்பதே இந்தப் படகுகள் அனுப்பப்பட்டதன் நோக்கமாகும். ஆனால் கடுப்பும்,திமிரும் கொண்ட சிறீலங்காக் கடற்படை, தனது கடல் எல்லைக்குள் இந்திய உதவிப் படகுகளை நுழைய விடாது தடுத்து, விளக்கம் எதுவும் வழங்காது இந்தியாவுக்குத் திருப்பியனுப்பியது. யாழ் தீபகற்பத் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவி புரிய முற்பட்ட வேளை சிறீலங்காவால் அவமானப்படுத்தப்பட்ட இந்தியா, தனது விமானப் படைப் போர் விமானங்களின் பாதுகாப்போடு, தளர்ந்து கிடந்த யாழ்ப்பாண மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை விமானப் பொட்டங்களாக வானிலிருந்து சொரிந்தது. வெகுண்டெழுந்த சிங்கள அரசு, தனது வான் எல்லையை அடாத்தாக மீறி விட்டதாக குற்றம் சாட்டியது. தனது இறைமையை இந்தியா அவமதித்து விட்டதாக சிறீலங்காவும் ,இனப்படுகொலையை சிறீலங்கா புரிவதாக இந்தியாவும் ஒருவரை ஒருவர் மாறி மாறிக் குற்றம் சாட்ட, இரண்டு அண்டை நாடுகளுக்கும் இடையே அரசியல் முறுகல் நிலை உரமேறியது.

### இந்திய - இலங்கை உடன்பாடு

கொந்தளிப்பான இந்த நாள்களில் கிட்டு எம்மிடம் சென்னைக்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் கிட்டுவைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அந்தத் தாக்குதலில் கால் துண்டிக்கப்பட்ட நிலையிலே மருத்துவச் சிகிச்சைக்காக சென்னை வந்திருந்தார்.இதே காலகட்டத்தில் இலங்கைத் தேசிய நெருக்கடிக்கு, அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்கும் முயற்சி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தீவிரம் பெறுவதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன. இந்த முயற்சி புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் மட்டுமே நடந்து கொண்டிருந்தது. விடுதலைப்புலிகளுடன் காத்திரமான ஆலோசனை எதுவும் நடக்கவில்லை. இந்தப் புதிய அரசியல் முயற்சி பாலாவுக்குத் திருப்தி தரவில்லை. விடுதலைப்புலிகளைக் கலந்தாலோசிக்காமல்,ஓர் அரசியல் தீர்வை அவர்கள் எப்படி எடுக்க முடிவு செய்யலாம் என்பதே அவர் வாதம். எவ்வளவு தான் ஆழமான பேச்சுக்களை நடத்தினாலும் சரி,இரு நாடுகளுக்கும் மத்தியில் அரசியல் இணக்கம் காணப்பட்டாலும் சரி, விடுதலைப்புலிகளைப் புறக்கணித்து எடுக்கும் முடிவானது புலிகள் மீதும் தமிழினம் மீதும் திணிக்கப்பட்ட ஓர் தீர்மானமாகவே இருக்கும். அதே சமயம் தமது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விவாதிக்கும் தமிழ் மக்களின் சனநாயக உரிமை மீறப்பட்டதாகவும் இருக்கும். நிலை இவ்வாறு மாற்றமடைவதை ஒட்டி, நாம் கவலையோடு இருக்கும் போது, தமிழ்நாட்டு முதலமைச்சருடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக மாநில காவற்றுறையினர் பாலாவை அழைத்துச் சென்றனர்.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஒகஸ்ட் 19ஆம் திகதி வெளியிடப்பட்டது.